15வது வருடத்தில்

# விளம்பரம்™


VLAMBARAM™

☎ 416-282-8059 · 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்



OPEN 7 DAYS

416-264-3232

3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்


வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 12 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 15, 2005



சுரேஸின் புதிய சாதனை 03



ஸ்ரீமுருகனுடன் நேர்காணல் 23




# பொதுக்கட்டமைப்பின் புதிய கட்டுமானம்

பொதுக்கட்டமைப்பு ஓர் ஆண்டுகாலம் மட்டுமே செயல்படும்

மூன்றுபேர் கொண்ட உயர்குழுவில் புலிகளின் உறுப்பினரும் இருப்பார். சந்திரிகா கையெழுத்து இடுவார் என்று எதிர்பார்க்கப்படும் பொதுக்கட்டமைப்பு பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன. அதில் இருந்து சில தகவலகள்.

கடல் கோளால் பாதிக்கப்பட்டுள்ள சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களுக்கான மனிதாபிமான தேவைகளுக்கான நிவாரண பகிர்வு, மற்றும் மீள்கட்டமைப்பு ஆகியவற்றை மேற்கொள்ள, இவ் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து இந்தப் பணியை நிறைவேற்ற, பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் மீளமைப்புக்கான நிதியை ஒதுக்கீடு செய்ய இந்தப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது.



இனம், மதம், மொழி அடிப்படையில் எவருக்கும் எதிராக பாகுபாடு காட்டுவதை பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் தடை செய்கின்றது.

மூன்று குழுக்களைக் கொண்டு இந்த பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும். உயர்நிலைக்குழு, பிரதேச ரீதியான குழு, மாவட்டக்குழு என்று இவை இருக்கும். இக்குழுக்கள் கடலோரத்தில் இரண்டு கிலோ மீற்றருக்குள் உட்பட்ட பகுதிகளிலேயே செயல்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை எவ்விதத்திலும் இந்த பொதுக்கட்டமைப்பு மாற்றியமைக்காது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## நிரபராதி மைக்கல் ஜாக்சன்

பிரபல அமெரிக்கப் பாடகர் மைக்கல் ஜாக்சன் பாலியல் அத்துமீறல் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சிறுவன் ஒருவனை பாலியல் ரீதியாக தவறாகப் பயன்படுத்தினார் என்று மைக்கல் ஜாக்சன் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. தீர்ப்பின் பின்னர் மைக்கல் ஜாக்சன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாலும் மிகவும் களைப்படைந்தவராகக் காணப்பட்டார். மைக்கல் ஜாக்சன் மீது தொடர்ந்து இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடரப்பட்டாலும், இதுவரை எதுவுமே நீதிமன்றத்தில் நிறுவப்படவில்லை.

## இலங்கை-இந்திய இராணுவ ஒப்பந்தம் தயார்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள கூட்டு இராணுவ ஒப்பந்தம் சகல முடிவுகளுடனும் தயாராக உள்ளதாக இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களை ஒடுக்கவே பயன்படுத்தப்படும் என்று வைகோவும், இராமதாசும் கூறிவருகின்ற போதும், இந்திய அரசாங்கத்தில் முக்கியத்துவம் பெற்ற இவர்களின் எதிர்ப்பை மீறி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

தற்சமயம் இந்தியா 450 இலங்கை படையினர், மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றது. இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் பயிற்சி பெறவும், இலங்கை ஆகாயப்பிரதேசம் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வரவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று தெரியவருகின்றது



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.


Singapore Communication
Since 1991

$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***

More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)


துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு




மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"



HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)

• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business



416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ON M1B 5P9, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# உங்கள் வியாபார வெற்றிக்கு இணையத்தளம் தேவையா?

பகுதி - 04

உங்கள் இணையத்தளம் மற்ற இணையத்தளங்களிலிருந்து வித்தியாசமானதாக இருக்க வேண்டும். அதிகமான பார்வையாளர்களை வரவழைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக வியாபார முன்னேற்றத்திற்கு உதவக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த மூன்று குறிக்கோளையும் அடைவதற்கு சில உத்திகளைப் பார்ப்போம்.

முக்கியச் சொற்களை (Keywords) ஆராய்க. உங்கள் வியாபாரம் அல்லது சேவையில் பிரபல்யமாக இருக்கும் சொற்கள் யாவை? மேலும் உங்கள் வியாபாரம் அல்லது தொழிலில் முக்கியமாக எலலோரும் பயன் படுத்தக்கூடிய சொற்கள் யாவை? ஆராய்க! எதற்காக?

வாடிக்கையாளர் இணையத் தளத்தில் பொருள் அல்லது சேவை அல்லது செய்தி அல்லது விடயத்தைத் தேடும் போது இந்தச் சொற்களைத்தான் பயன்படுத்தப் போகிறார். எனவே அவற்றை நீங்களும் உங்கள் இணைய தளத்தில் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

பிறகு ஓர் ஆய்வு செய்யுங்கள். நீங்கள் உபயோகப்படுத்தும் முக்கிய சொற்களைப் (Keywords) பயன்படுத்தினால் எத்தகைய இணையதளங்கள் வருகின்றன என்று கோரும் (Google) போன்ற தேடுதல் இயந்திரங்களில் பாருங்கள். அவற்றிலும் முன்னதாக உங்கள் இணையத்தளத்தைக் கொண்டு வர வேண்டுமானால் எத்தகைய சொற்களை உங்கள் இணையதளத்தில் சேர்க்க வேண்டும். யோசியுங்கள். கற்றதைச் செயல்படுத்துங்கள். பழைய சொற்களை மாற்றியோ, புதிய சொற்களைச் சேர்த்தோ, இணையதள தேடுதல் இயந்திரங்களில் உங்கள் இணையதளத்தை முன்னுக்குக் கொண்டு வாருங்கள்.

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

மனிதக்கண்கள் உங்கள் இணையத்தள வடிவமைப்பை ரசிக்கலாம். ஆனால் இயந்திரத்தேடல் (Search Engine) வார்த்தைகளைத் தான் தேடுகிறது. செய்திகளைத் தான் தேடுகின்றது. உங்கள் வடிவமைப்பை அல்ல. வாடிக்கையாளர் பெரும்பாலும் இணையத்தளம் எது என்று பதில் இரண்டுக்கும் “ஆம்” என்பதே. இயந்திரத் தேடலுக்கு நீங்கள் விரும்பினால் உங்கள் இணையதளத்தைச் சமர்ப்பிக்கலாம். அப்படிச் சமர்ப்பிக்க நினைத்தால், அவர்களின் விதிகளை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். இல்லையென்றால் அப்படியே விட்டுவிடலாம். தானாகவே தேடலுக்கு உங்கள் இணையத் தளம் ஆட்படலாம். சுமார் 50 இயந்திர தேடல்களின் சந்தைப்பங்கு 90 சதவீதத்திற்கும் மேல். இவை எல்லாவற்றிலும் மிகப் பிரபல்ய மானவை. யாகூ, கோகுல் போன்ற சில இயந்திரத் தேடல்களே.

சில இயந்திரத் தேடல்கள், நீங்கள் சற்றே பணம் செலுத்தத் தயாராயிருந்தால் சில அதிகப்படியான வசதிகளைத் தரத் தயாராயிருந்தால் சில அதிகப்படியான வசதிகளைத் தர தயாராயிருக்கும். அவை என்னென்ன வசதிகள் என்று தெரிந்து கொள்ளுங்கள். பிறகு அத்தகைய வசதிகள் உங்களுக்கு வேண்டுமா என்று முடிவு செய்து கொள்ளுங்கள். அதன்பிறகு பணம் கொடுக்க வேண்டுமா, இல்லையா என்று முடிவெடுக்கலாம். பல சந்தர்ப்பங்களில் இத்தகைய வசதிகள் ஒருவகை விளம்பரமாகவே இருக்கக் காணலாம்.

அடிக்கடி இயந்திரத் தேடலில் உங்கள் இணையத்தளம் எத்தகைய இடத்தில் உள்ளது என்று கண்காணியுங்கள். நிலைமையை அனுசரித்து, உங்கள் உத்திகளைத் தொடர்ந்து கையாளுங்கள் அல்லது மாற்றிக்கொள்ளுங்கள்.

**பெரி. முத்துராமன்**

ஆக, முக்கியச் சொற்களை ஆராய்ந்தீர்கள், உங்கள் இணையதளத்தை தேடலில் முன்னுக்குக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டீர்கள். பிறகு இணையத்தளத்தைத் தேடல் இயந்திரத்திற்குச் சமர்ப்பித்தீர்கள். பிறகு உங்கள் முயற்சிகள் வியாபார முன்னேற்றத்திற்கு எவ்வாறு பயன்பட்டன. பயன்படச் செய்யலாம் என்று தொடர்ந்து கண்காணிக்கிறீர்கள். இல்லையா?



வேறென்ன, மேலும் இணையத்தளம் பற்றிய விபரங்களை அடுத்த விளம்பரத்தில் பார்ப்போம்.


**WEB CREATION**

**அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள்** M. Karthik

தொலைபேசி எண் - 647 519 0623




# பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர்

பெரும்பான்மையான சிங்கள மக்கள்

ஜேவிபியின் கருத்தில் இல்லை!



‘சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய பிரதேசங்களுக்குக் கிடைக்காத பல சலுகைகளும், வசதிகளும் அம்பாந்தோட்டை பிரதேசத்திற்குக் கிடைக்கின்றது. இலங்கைக்கு உதவி வழங்க ஆர்வத்தோடு வருகின்ற பெரும்பான்மையான வெளிநாட்டு அமைப்புகளும் அம்பாந் தோட்டையை நோக்கியே செல்கின்றன. இது ஏன் என்று தெரியுமா?’ என்ற ஒரு முடிச்சோடு அடுத்த விடயத்தை தொடங்கினார் சரத் பொன்னான்டோ.

‘சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைக்கப் படவேண்டிய நிரந்தர வதி விடங்களையும், தன்னார்வ நிறுவனங்களைக் கொண்டே இலங்கை அரசு அமைக்க முயல்கின்றது. இந் நிலையில் 97% மான, அவசியமான நிரந்தர வதிவிடங்களை, அம்பாந்தோட்டையில் அமைப்பதற்காக இலங்கை அரசாங்கம் தன்னார்வ அமைப்புகளுடன் கைச்சாத்திட்டுள்ளது என்று அரசாங்க உத்தியோக பூர்வதகவல் தெரிவிக்கின்றது. மற்றய அனைத்து பிரதேசங்களிலும் இத்தகைய நிரந்தர வதிவிடங்களை அமைக்க அரசு சார்பு அற்ற நிறுவனங்கள் ஒத்துக் கொண்டுள்ளது எட்டு வீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.’

‘ஏன் இந்த பாரிய வித்தியாசம்’ என்று கேட்டோம்.

‘இதற்கு காரணம் வேறு ஒன்றும் இல்லை. இந்தத் தொகுதி இலங்கைப் பிரதம மந்திரியின் தொகுதி என்ற ஒரே காரணத்தினால் இவ்வளவும் நிகழ்கின்றது. வெளிநாட்டு அரசுசார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு வந்ததும், முதலில் அவர்கள் போகவேண்டிய இடம் பிரமரின் காரியாலயமாகும். இங்கிருந்து இந்த நிறுவனங்களுக்கு எங்கு போகவேண்டும் என்ற வழிநடத்தல் கொடுக்கப்படுகின்றது. இதனால் மிக இலேசாக பிரமருக்கு தனது தொகுதிக்கு எல்லாவற்றையும் திசைதிருப்பிட முடிகின்றது’ என்கின்றார் சரத்.

‘இலங்கையின் பிரதான கட்சிகள் இரண்டுமே தமிழ்மக்களின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்ற நிலைமைக்கு வந்த பின்னர், ஏன் ஜேவிபி இனவாதத்தை கிளறுகின்றது?’ என்ற கேள்விக்கு சற்று காரமாகவே சரத் பதில் அளித்தார்.

‘இலங்கை அரசாங்கம் எப்படி செயல்பட வேண்டும் என்பது பற்றிய எந்த விதமான பொறுப்புணர்வும் ஜேவிபிக்கு கிடையாது. அது பற்றிய அக்கறையும் அவர்களுக்கு இல்லை. அரசாங்கத்தில் பங்கு வகித்துக் கொண்டு பொறுப்பற்ற தன்மையுடன், மக்கள் மத்தியில் மலிவான முறையில் பிரபல்யம் அடைவதற்கான வேலைகளையே இவர்கள் செய்கின்றனர். ஆனால் பெருபான்மையினரான சிங்கள மக்கள் ஜேவிபியின் கருத்தோடு உடன்படவில்லை. இலங்கையில் சிங்கள அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானத் திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும், யுத்தம் நிறுத்தப்பட்ட வேளையிலுமே, பெரும்பான்மை சிங்கள மக்கள் பெரு மகிழ்சியடைந்தனர்.’

‘இலங்கையில் நிகழும் இனப்பிரச்சினை தொடர்பாக அக்கறை இல்லாத, ஓரளவு கூட என்ன நடக்கின்றது என்ற தகவல் தெரியாத சிங்கள மக்களிடம், நாம் உங்களை பாதுகாக்க விளைகின்றோம் என்று ஜேவிபி கதை விடுகின்றது. நான் ஏற்கனவே கூறியது போல உண்மையில் ஜேவிபி சிங்கள மக்களை ஒரு பெரும் யுத்த அழிவை நோக்கி நகர்த்துகின்றதே தவிர அவர்களை பாதுகாப்பது பற்றி சிந்திக்கவில்லை.’

‘இப்போது நடந்தது போல மீண்டும் ஒரு சுனாமி வருமாயின் அதனை எதிர்கொள்ள இலங்கை அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது?’ என்ற நமது கேள்விக்கு சரத் அளித்த பதில் அதிர்ச்சியாக இருந்தது.

‘இன்னுமோர் சுனாமி வருமாயின், அந்த அழிவில் இருந்து முன் கூட்டியே மக்களைப் பாதுகாக்க எந்த ஒரு திட்டத்தையும் இலங்கை அரசு அமுல் படுத்தவில்லை. அது மட்டுமல்ல எந்த ஒரு திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. ஜப்பான், பங்களா தேஸ் அரசுகள் எல்லாம் மீண்டும் ஒரு முறை சுனாமி வருமாயின் மக்களை எப்படி பாதுகாப்பது என்று திட்டமிட்டு செயலாற்றுகின்ற வேலையில் நமது இலங்கை அரசு எந்த வித அக்கறையும் அற்றுக் கிடக்கின்றது.’


‘இலங்கை அரசாங்கம் எப்படி செயல்பட வேண்டும் என்பது பற்றிய எந்த விதமான பொறுப்புணர்வும் ஜேவிபிக்கு கிடையாது. அது பற்றிய அக்கறையும் அவர்களுக்கு இல்லை. அரசாங்கத்தில் பங்கு வகித்துக் கொண்டு பொறுப்பற்ற தன்மையுடன், மக்கள் மத்தியில் மலிவான முறையில் பிரபல்யம் அடைவதற்கான வேலைகளையே இவர்கள் செய்கின்றனர்.’

“இலங்கையில் சிங்கள அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானத் திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும், யுத்தம் நிறுத்தப்பட்ட வேளையிலுமே பெரும் பான்மை சிங்கள மக்கள் பெரு மகிழ்சியடைந்தனர்.”

# தமிழ் மாணவியின் வெற்றி

ஸ்காபுரோ பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட கணித ஒலிம்பிக்போட்டியில் பெண்களுக்கான ஏழாம் வகுப்புப் பிரிவில் 2005 ஆம் ஆண்டின் சாம்பியனாக றூத் ஆதிரை விமலநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது வெற்றி தமிழர் சமூகத்துக்குக் கிடைத்த வெற்றி ஆகும். இவர் விளம்பரம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவரும், அறிவியல் தகவல்கள் பலவற்றைத் தருபவருமாகிய சின்னையா விமலநாதன் (கனி) அவர்களின் மகளாவார்.

இப்போட்டி ஒன்ரா ரியோ கணித பயிற்றுனர் சங்கத்தின் அனுசரணையுடன் ஸ்காபுரோ கணிதக் கல்விச் சபையின் அமைப்பினால் வருடா வருடம் ஏழாம், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது.




விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada

TEL: 416-282-8059 FAX: 416-282-4978

e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



**HOME INSPECTION**

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# இளமையில் இருந்து முதிர்ச்சி அடைவதைத் தடுக்கின்ற உயிர்ச்சத்து எது?

## நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 9

தமது கூட்டத்தை விட்டு பிரிந்து, மதம் பிடித்து அலையும் யானை எவ்வளவு ஆபத்தானதோ, அதேபோல ஆபத்து மிகுந்தவையே சுயாதீன மூலகங்கள் (Free radical) ஆகும். எமக்கு ஆபத்தை ஏற்படுத்தாமல் இவை விடப்போவதே இல்லை.

நமது உடல் இயங்குவதற்குத் தேவையான சக்தியை ஒவ்வொரு கலமும் உற்பத்தி செய்கின்றது. உண்மையில் உடல் முழுதும் உள்ள கலங்களிலும் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் உள்ளன.

கலங்களில் உள்ள இந்த தொழிற்சாலைகள் குளுக்கோசையும், ஒட்சிசனையும் பாவித்து சக்தியை உருவாக்குகின்றன. இந்த நிகழ்சி நிகழும் போது பக்க விளைபொருளாக சுயாதீன மூலகங்கள் உருவாகின்றன.

சுயாதீன மூலகங்களில் இலத்திரன் (electron) குறைந்து காணப்படும். தனித்து நிற்க முடியாதவை. இவை தம்மை முழுமையாக்கிக் கொள்வதற்கு இலத்திரனைத் தேடி மிக மூர்க்கமாக அலையும். கேட்டுக் கேள்வி இல்லாமல், தமக்கு அண்மையில் உள்ள கலங்களில் இருந்தே இலத்திரனைப் பறித் தெடுத்துக் கொள்கின்றன. இதன் காரணமாக கலத்திற்கு பாரதூரமான சேதங்கள் ஏற்படும்.

சுயாதீன மூலகங்கள் நமது கலங்களின் கலச்சுவரைத் தாக்குகின்றன, கலத்தில் உள்ள புரதத்தையும், DNA யையும் பாதிக்கின்றன. இவை காரணமாக உடலில் பல பாரிய கேடுகள் விளைவிக்கப்படுகின்றது. வயோதிபம் அடைதல், இதயநோய்கள், சில வகை புற்றுநோய்கள் வருதல், கண்ணில் படலம் உருவாகுதல் (Cataracts) என்பனவெல்லாம் இந்த சுயாதீன மூலகங்களினால் ஏற்படுகின்றது என்று அறியப்பட்டுள்ளது.

உடலுக்கு உள்ளிருந்து மட்டுமல்ல சுற்று சூழலில் இருந்தும், இயற்கையின் வேறு காரணங்களினால் இத்தகைய சுயாதீன மூலகங்கள் உருவாகின்றன. இவற்றினாலும் இதேவிதமான பாதிப்பு நமது உடலுக்கு ஏற்படுகின்றது. சிகரெட் புகை, சூரியனின் Ultra violet கதிர், கார்



புகை, தொழிற்சாலை இரசாயனக் கழிவுகள், உடுப்புக் கழுவும் சில பதார்த்தங்கள், பெயின்ட், ரேடியோ அலைகள், மைக்ரோ அலைகள் என்று இந்த சுயாதீன மூலகங்கள் உள்ள பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.

பொரிப்பதற்கு பாவிக்கின்ற எண்ணெயை வீணாக்கி விடக்கூடாது என்ற எண்ணத்தில், திரும்பத் திரும்ப பாவித்த எண்ணெயை வாரக்கணக்காக பயன்படுத்தும் ஒரு பழக்கம் நம்மிடம் உள்ளது. உணவு விடுதிகளிலும் இதே பழக்கம் உள்ளது. ஒரு முறை பாவித்த எண்ணெயில் பிரமாண்டமான சுயாதீன மூலகங்கள் உருவாகிவிடுகின்றது. அதை திரும்பத், திரும்ப சமயலுக்குப் பாவிக்கும் போது சுயாதீன மூலகங்கள் பல்கிப் பெருகுவது மட்டுமல்ல பொரித்த உணவுடன் சேர்ந்து நமது உடல் கலங்களை அழிக்கின்ற வேலையையும் செய்கின்றன. சில சதங்களை மிச்சம் பிடிக்கின்ற ஆசையில் உங்களது ஆயுளை குறைக்கின்ற வேலையைச் செய்யாதீர்கள்.

இந்த சுயாதீன மூலகங்களின் கொடுமையில் எம்மைக் காப்பற்றுகின்ற வேலையை உயிர்சத்து E செய்கின்றது. அதனால் இது ஒரு antioxidant என்று அழைக்கப்படுகின்றது. இதனால் பல நோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது அல்லது பிற்போடப்படுகின்றது. குருதிக்கலங்கள், நரம்பு மண்டலம், எலும்பில் உள்ள தசைகள், கண் என்பனவற்றுக்கு உயிர்சத்து E மிக அவசியம்.

உயிர்சத்து E கொழுப்பில் கரையக் கூடிய ஓர் உயிர்ச்சத்தாகும். உடலின் ஒவ்வொரு கலத்திலும் நிகழும் Metabolism துடன் உயிர்சத்து E க்கு தொடர்பு உண்டு. உயிர்சத்து E யுடன் சேர்த்து உயிர்சத்து C, பீற்றா கரோட்டின், மற்றும் கனியுப்புகளான செலினியம், சிங் என்பனவும் சக்திவாய்ந்த antioxidant என்று கருதப்படுகின்றன.

இந்த antioxidant கள் சுயாதீன மூலகங்களுக்கு தேவையான இலத்திரனை வழங்கி அவற்றை பூரணத்துவமான மூலகங்களாக மாற்றி விடுகின்றன. அதனால் அவற்றினால் வரக்கூடிய பாதிப்புகளில் இருந்தும் நமது கலங்களை பாதுகாத்து விடுகின்றன.

குருதிக் குழாய்களில் 'கூடாத' கொலஸ்ரோல் என்று அழைக்கப்படும் LDL கொலஸ்ரோல் அடைப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் இதய நோய்கள் ஏற்படுகின்றன. இந்த LDL கொலஸ் ரோல் ஒட்சியேற்றம் அடையாமல் உயிர்சத்து E தடுக்கின்ற வேலையைச் செய்கின்றது. அதனால் இதயநோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது.

கண்ணில் உள்ள குவியத்தில் (Lens) உள்ள புரதம் ஒட்சியேற்றம் அடைவதால் கண்ணில் படலம் ஒன்று (cataracts) உருவாகின்றது. இதனால் பார்வையில் குறைபாடு ஏற்படும். உயிர்சத்து E குவியத்தில் உள்ள புரதம் ஒட்சியேற்றம் அடைவதை தடைசெய்கின்றது என்று ஆய்வுகள் சொல்கின்றன.

உயிர்சத்து E க்கு உடலில் வேறு பல தொழிற்பாடுகளும் உள்ளன. தசை இழையத்தின் வழமையான தொழிற்பாட்டுக்கு, கலங்களின் மறுஉற்பத்திக்கு, நோய் எதிர்ப்பு தன்மை (Immune function), DNA யில் பழுது ஏற்பட்டால் திருத்துவது, உடலுக்கு மிக அவசியமான Essential fatty acid கள் ஒட்சியேற்றம் அடையாமல் பாதுகாப்பது என்று பல வகையில் உயிர்சத்து E உடலுக்கு அவசியம்.

### செழியன்

உயிர்சத்து E ஆனது கீரை, தக்காளி, சோயாவில் மிக குறைந்த அளவு உள்ள போதும், கொழுப்பு பொருட்கள் உள்ள உணவுகளிலேயே பெருமளவு உள்ளது. ஒலீவ் எண்ணெய், சோளம் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், முட்டை, கோதுக் கடலை, மயனைஸ் (Mayonnaise) என்பனற்றைக் குறிப்பிடலாம். அதனால் கொழுப்பு பொருட்களை தவிர்த்துக் கொள்பவர்கள் தமக்கு அன்றாடம் தேவையான உயிர்சத்து E ஐ பெற்றுக் கொள்கின்றனாரா? என்பது சந்தேகமே.


# சுரேஸ் ஜோக்கிமின் புதிய கின்னஸ் சாதனை

அருளானந்தம் சுரேஷ் ஜோக்கிம் என்ற தமிழ் வாலிபர் இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுதும் அறியப்பட்டவர். இவர் படைத்துள்ள கின்னஸ் உலக சாதனைகளே உலகளவில் இவரை அடையாளப்படுத்தி வைத்திருக்கிறது. முயன்றால் எதையும் சாதனைகளாக்கலாம் என்பதற்கு இவர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

ஜுன் 08, 2005 புதன்கிழமை அன்று ஆரம்பித்து ஜுன் 12, 2005 ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோவில் 100 மணித்தியாலங்கள் தொடர்ந்து 10 கட்டைகள் அடுக்கி பந்து உருட்டி (Ten pin bowling) அடிக்கும் விளையாட்டை விளையாடி தனது சாதனைப்பட்டியலில் இப்புதிய சாதனையையும் சேர்த்துக்கொண்டார். இத்தாலியரான ஜியன்காலோ ரிலி (Gianearlo Tlie) கடந்த செப்ரெம்பரில் மால்ராவில் செய்த கின்னஸ் உலக சாதனை நேரமான 60 மணி 15 நிமிடத்தை முறியடித்து இச்சாதனையை படைத்துள்ளார். இது இவரது முப்பதாவது சாதனை ஆகும்.

இதுவரை முப்பது உலக சாதனைகளை படைத்திருக்கும் சுரேஷ் ஜோக்கிம் இற்கு நிதி ஆதரவு தர தாபனங்கள் பலதும் முன்வரும் பட்சத்தில் நூற்றைம்பது உலக சாதனைகளையாவது தன்னால் செய்துவிட முடியுமென்று கூறுகின்றார். அதிகளவில் உலகசாதனை செய்தவர் என்பதில் சுரேஷ் ஜோக்கிம் இரண்டாவது இடத்திலுள்ளார்.

தொடர்ந்து 100 மணித்தியாலங்களுக்கு போலிங் விளையாடியது இவருக்கு 30 ஆவது சாதனை. சுரேஷ் ஜோக்கிம் நிகழ்த்திக் காட்டிய உலக சாதனைகளில் பதினாறு இன்னமும் முறியடிக்கப்படாதுள்ளன. மிசிசாகாவில் நடந்த தனது திருமணத்தையே உலக சாதனைக் களமாக ஆக்கிக் காட்டினார். மேலும் சாதனைகள் படைப்பதுபற்றி தனது மகன் ஜோஷ்வாவுக்கும் கற்பிக்க ஆவல் கொண்டுள்ளதாவும் இவர் கூறுகிறார்.




இவரது இருபத்தொராவது பிறந்த நாளே இந்தச் சாதனைகளின் தொடக்கம் எனலாம். இந்தப் பிறந்த நாளுக்கு பரிசாக மாமா கொடுத்த உலகசாதனைகள் பற்றிய புத்தகத்தை வாசித்த சுரேஷ் ஜோக்கிம் தானும் உலகசாதனையாளனாக மாறலாம் என்கின்ற நம்பிக்கை விதையை தன் மனதில் ஊன்றிக் கொண்டார். படிப்படியாக முயற்சித்து ஒற்றைக்காலில் நிற்கும் சாதனையை செய்ய முயன்று 47 மணித்தியாலங்கள் நின்றார். அந்தச்சாதனை அதே காலத்தில் இந்தியர் ஒருவரால் 55 மணித்தியாலங்கள் ஒற்றைக்காலில் நின்று முறியடிக்கப்பட்டது. பின்னர் வேறோர் சாதனை செய்ய எண்ணி தன் 26 ஆவது வயதில் கொழும்பில் 1996 ஒகஸ்ட் 19 முதல் செப்டெம்பர் 29 வரை 42 நாட்களாக 3,495 கி.மீ தூரம் ஓடி தனது முதலாவது சாதனையை வெற்றியுடன் செய்து காட்டினார்.

ஒற்றைக் காலில் நிற்கும் சாதனையை 1997 இல் மீண்டும் 76 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் செய்து இன்றுவரை இச்சாதனையினை தன்வசம் வைத்திருக்கிறார். வாசிப்பு மனிதனுக்கு மனவளத்தை பெருக்கும் என்பதுடன் அவனை ஒரு சாதனையாளனாக மாற்றியும் காட்டும் என்பதற்கு எமது நாட்டுச் சாதனையாளர் அருளானந்தம் சுரேஷ் ஜோக்கிம் ஒரு நல்ல உதாரணமாகிறார்.

உலக சாதனை செய்வதுமட்டுமல்ல அதனை நன்நோக்காகக்கொண்டு செய்வதே அவரது சிறப்பு. இவரது சாதனைகளின்போது சேரும் பணத்தை ஆசிய ஆபிரிக்க குழந்தைகளின் பட்டினியைப் போக்க பயன்படுத்துகின்றார். தனது உலக சாதனைக் களத்தை போரிலிருந்து குழந்தைகள் காப்பாற்றப்படவேண்டும் என்கின்ற சேதியைக் கூறிடப் பயன்படுத்துவதாக இவர் கூறுகின்றார்.

இவர் அடுத்து 2005 டிசம்பர் 25 இல் யேசுநாதர் அவதரித்த ஜெருசலத்திலிருந்து ஓர் அமைதித் தீபத்தை ஏந்திக்கொண்டு 88 பெரு நகரங்களை உள்ளடக்கிய 54 நாடுகளூடாக யூன் 24, 2006 இல் அவுஸ்ரேலியாவில் தன் பவனியை முடிக்கும்போது அந் நாளை உலக யுத்த நிறுத்த நாளாக அறிவிக்க வேண்டுமென்ற ஒரு மில்லியன் கையெழுத்துகளைக் கொண்ட விண்ணப்பத்தை ஐ.நா.ச. செயலாளர் நாயகம் கோபி அனனிடம் கையளிக்கப் போவதாகவும் சங்கல்ப்பம் பூண்டுள்ளார். அதுமட்டுமல்லாது அப்பயணத்தின்போது ஒரு பில்லியன் டொலர் தன்னால் சேர்க்க முடியுமென்றும் அதனையும் ஆசிய ஆபிரிக்கக் குழந்தைகளின் பசி பட்டினி நோயைப் போக்கிடப் பயன்படுத்தப்போவதாகவும் கூறுகின்றார்.

1983 யூலைக் கலவரத்தை இன்றும் அவரால் மறக்கமுடியாதுள்ளதாம். தன் பாடசாலை விடுதியிலிருந்து தான் கண்ட கோரக் காடசிகள்தான் தன்னை யுத்தமின்றிய ஓர் உலகத்தைக் காணும் அவாவாவைத் தந்ததாகவும் யுத்தத்திலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றிட தன்னால் இயன்றதைச் செயயத் தூண்டியதாகவும் கூறுகின்றார்.

பல்வேறுபட்ட பிரிவுகளில் ஒவ்வொரு கின்னஸ் உலக சாதனைகளையாவது செய்துவிடும் நோக்கில் செயற்படத் திட்டமிட்டிருக்கும் சுரேஷ் ஜோக்கிமின் உலக சாதனைகள் தொடர விளம்பரமும் வாழ்த்துகிறது.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# தமிழராய் இருப்போம்

தமிழ்மொழி வாரம் நிகழ்த்தும் கனடா வாழ் தமிழ் மக்களின் மொழிப்பற்றுக்குத் தலை வணங்குகிறேன். கருத்தை வெளிப்படுத்தும் ஒரு கருவி மட்டுமே மொழி - அதற்கு மேல் மொழிக்கு எந்தச் சிறப்புமில்லை என்பது தவறு. மாந்தர் உறவுக்கும் - கலை, பண்பாடு போன்றவற்றின் உருவாக்கத்துக்கும் - உழைப்புக்கும் - மாந்தர் உயர்வனைத்துக்கும் உயிரானது மொழியே.
இதனால்தான் எல்லோருமே தங்கள் தாய்மொழியை இன்னுயிர் என்கிறார்கள்.

"தமிழுக்கு அமுதென்று பேர்!
தமிழின்பத் தமிழெங்கள்
உயிருக்கு நேர்!"
என்றார் பாரதிதாசன்.

உருசிய மொழியோடு செய்தி இதழ்களில் பிறமொழிச் சொற்கள் கலப்பதைக் கண்டு நொந்த உலகப் புரட்சியாளர் லெனின், "என் தாய் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பதைப் பார்க்கும் போது சினமாக இருக்கிறது எதிர்த்துப் போராடவேண்டும் போல் தோன்றுகிறது" என்று உறுமினார்.

"நாளை என் அவர் மொழி
இறக்குமானால்
இன்றே நான் இறந்து விட
விரும்புகிறேன்"
என்றான் தசுக்கித்தான் பாவலன் இரசூல் அம்சத்தொவ்.
தாய்மொழியாம் தமிழை உலகெங்கும் சிதறி

**- காசி ஆனந்தன்**

வாழும் ஈழத் தமிழர்கள் நெஞ்சிலும் நாவிலும் பொழுதெல்லாம் தாங்க வேண்டும்.

முற்றிலும் பிற இனத்தாரோடு கலந்த வாழ்க்கை கொண்ட அவர்கள் மொழி மாறி இனம் மாறிப் போய்விடாது தடுத்தல் ஈழத்தமிழரிடையே வாழும் தமிழுணர்வாளர்தம் முதற் கடமை.

பிறமொழி கலக்காத தூய தமிழில் வீடுகளில் பிள்ளைகளோடு பெற்றோரும் - பெற்றோரோடு பிள்ளைகளும் உரையாட வேண்டும்.

தமிழை எழுதவும் படிக்கவும் தமிழ்ப் பிள்ளைக்குக் கற்றுக் கொடுங்கள்.

காகத்தின் கூட்டில் குயிலின் குஞ்சுகள் வளர்ந்தாலும் அவை காகத்தின் மொழியில் கத்துவதில்லை. காது கொடுத்துக் கேளுங்கள்.

இன்னொருவனாய்த் தமிழன் கரைந்து போகாமல் இன்றே தடுப்போம்.

தமிழீழம் மலரும் நாள் தொலைவில் இல்லை.
திரும்புவோம் - ஆங்கிலேயனாய் பிரெஞ்சுக்காரன-ாய் செருமானியனாய் அல்ல -
தமிழனாய் - நாடு திரும்புவோம்!



# தமிழ் மொழி வாரம் சிறப்புப் பக்கம்

**யூன் 26 . 2005 - யூலை 02 . 2005**

எமது சமூகத்தின் உயிர்ப்பான இருப்பு எமது மொழியையும் எமது கலை, இலக்கியங்கள், பண்பாட்டையும் பேணி வளர்ப்பதிலேயே தங்கியுள்ளது. புலம் பெயர்ந்தாலும் மொழிப் புலமையை வளர்த்துக் கொள்கிற சமூகங்கள் வரலாற்றை வெற்றி கொள்கின்றன. தமிழ்மொழி கற்றலின் அவசியத்தையும் தமிழ்மொழியின் சிறப்பையும் வலியுறுத்தவும் தமிழுக்கு வளத்தையும் புதுமையையும் சேர்க்கவும் தமிழ்மொழி வளர்ச்சியை முன்னெடுப்பதற்காகத் தமிழ்மொழி வாரம் கொண்டாடப்படுகிறது.

"தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு"

# தமிழ் மொழி வாரம் ஏன்?

இனமொன்றின் முழுமையான இருப்பு தனது மொழியையும் அந்த மொழி வழிப் பிறந்த பண்பாட்டையும் தன்னகத்தே கொண்டிருப்பதிலேயே தங்கியுள்ளது என்பது நாம் அனைவரும் உணர்ந்த உண்மையாகும்.

இது இவ்வாறு இருப்பினும் எமது இனத்தின் பெரும்பாலான பெற்றோர்கள் தம்பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கு முன்னுரிமை வழங்கவில்லை அல்லது கற்பிக்கவே இல்லை.

1990-ஆம் ஆண்டு முதல் கனேடிய மண்ணில் தமிழ்மொழியைக் கற்பிப்பதில் எமது கல்லூரி வாயிலாக ஈடுபட்டு வருவதனாலும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பல நாடுகளிலும் தமிழ்மொழி கற்பித்தலில் ஈடுபட்டுள்ள பல தரப்பினருடனும் உள்ள தொடர்பு காரணமாகவும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியைக் கற்பிக்காமைக்குரிய சில காரணங்களை அடையாளம் கண்டு கொண்டுள்ளேன். அவற்றுள் பெரும்பாலானவை பெற்றோர்கள் கொண்டுள்ள ஐயங்களாக அமைந்துள்ளன. அவையாவன:

1. "எனது பிள்ளை தமிழ்மொழியைப் பேசிக் கொண்டிருந்தால் பாடசாலைக்குப் போனதும் தனது நாளாந்தக் கல்வியைக் கற்பது கடினமாக இருக்குமே" - என்ற ஐயுறவு.
2. "ஓரளவு பேசத் தெரிந்தால் போதும்" - என்ற எண்ணம்.
3. "முதலில் ஆங்கிலத்தைக் கற்கட்டும். பின்பு தமிழைப் பார்த்துக் கொள்ளலாம்" - என்ற எண்ணம்.
4. "தமிழ்மொழியைக் கற்பதால் பிள்ளைகளுக்கு மற்றைய பாடங்களில் கவனம் செலுத்த நேரம் போதாமல் இருக்கிறது."
5. "தமிழ்மொழியைக் கற்று என்ன பயன்?"
6. "இசை, நடனம், விளையாட்டு, ஆங்கில, கணித, விஞ்ஞானப் பாடங்களுக்கான மேலதிகப் பயிற்சி - இவற்றிற்கே நேரமும் பணமும் போதவில்லை. தமிழ் தானே அதனை விட்டு விடலாம்."
7. எல்லா இடத்துத் தமிழ்ப்பிள்ளைகளும் தமிழ் கற்க ஒரே இடத்திற்கு வருவதால் எங்கள் பிள்ளையும் போய் தீயநட்புக்கும் பழக்கத்திற்கும் ஆட்பட்டு விடுவார்களோ?" - என்ற அச்ச உணர்வு.
8. "நாம் பேசுகின்ற தமிழ், பிள்ளைகளுக்கு விளங்கும் தானே - ஆங்கிலத்தோடு, பிரஞ், ஸ்பனிஸ் கற்றால் நல்லது தானே" - என்ற எண்ணம்.
9. "தாம் வாழும் சூழலில் தமிழ்மொழியைக் கற்பிப் பதற்கான வசதிகள் அமையப்பெறாது இருப்பது."
10. "பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போய்வர நேரம் இல்லை."
11. "தமிழ்மொழியை ஒருவர் கற்பதால் தனிப்பட்ட முறையில் அவர் அடையும் நன்மை யாது?"
12. "குடும்ப வாழ்வியலில் தமிழ்மொழியின் பங்கு எவ்வாறு அமைகிறது?"
13. "தமிழ்மொழியைக் கற்காவிட்டால் அவர் அடையப் போகும் நட்டம் என்ன?"
14. "தமிழ்மொழி ஒருவரது பாடசாலைக் கல்வி முறையில் எத்த வகையில் பங்கு வகிக்கிறது?"
15. "புலம்பெயர்ந்த நாடுகளில் ஒருவனின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தமிழ்மொழி என்ன பங்கு வகிக்கிறது?"
16. "தமிழர் கலைகளைத் தமிழ்மொழி மூலம் தான் கற்க வேண்டுமா?"
17. "மூன்று, நான்கு ஆண்டுகளாகத் தமிழ் படிக்க எனது பிள்ளையை அனுப்பினேன். ஒரு பலனும் இல்லை அவருக்கு ஒன்றுமே வாசிக்கத் தெரியாது. ஏன் தொடர்ந்து வகுப்புக்கு அனுப்பவேண்டும்?"
18. "எட்டு, ஒன்பது வயது வரை தமிழ் படிக்க அனுப்பி வைத்தோம்.அதன்பின் பிள்ளை போக மறுத்துவிட்டார்."

நம்மவர் மத்தியில் தமது பிள்ளைகளுக்கு தமிழ்மொழி கற்பித்தல் தொடர்பாக இருக்கும் எண்ணங்கள், ஐயுறவுகள் என்பனவற்றில் சிலவற்றை நான் அறிந்த வரையில் கூறியுள்ளேன். இதில் ஒவ்வொரு விடயமும் அறிவியல், சமூகவரலாறு என்பவற்றின் துணை கொண்டு ஆய்வு செய்யப்பட்ட உண்மை நிலைமைகளை மக்கள் மத்தியில் பரப்புரை செய்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது சமூகப் பொறுப்பாகும்.

எனவே தமிழ்மொழி வாரத்தில் நடைபெற இருக்கும் மாலை நேர நிகழ்வுகளின் போது இவ்வகையான பரப்புரை செய்வதன் மூலம் எமது இனம் கொண்டுள்ள தவறான கருத்தைப் போக்கி பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியைக் கற்பிக்க வழிசெய்வதன் மூலம் அப்பிள்ளைகள் தம் பெற்றோர் களுடனும், சுற்றத்துடனும் ஆகுதல் மற்றும் முரணற்று வாழ்வதற்குத் துணைசெய்வதே தமிழ்மொழி வாரத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

**சு. இராசரத்தினம்**



## தமிழ் மொழி வாரம் - 2005

| | | |
|---|---|---|
| *JUNE 26, 2005* | ***Ashtonbee Campus***<br>75 Ashtonbee Road<br>(Warden & Ashtonbee) | ***5:00 PM - 8:30 PM*** |
| *JUNE 27, 2005* | ***Vimika***<br>1959 Finch Ave. W.<br>Downsview | ***6:00 PM - 9:00PM*** |
| *JUNE 28, 2005* | ***240 Wellesley Street***<br>(Sub-Basement)<br>(Wellesley & Parliament) | ***6:00 PM - 9:00 PM*** |
| *JUNE 29, 2005* | ***1350 Burnhamthorpe Rd. E***<br>(Burnhamthorpe & Dixie)<br>Mississauga | ***6:00 PM - 9:00 PM*** |
| *JUNE 30, 2005* | ***Sir John A MacDonald C. I.***<br>2300 Pharmacy Rd.<br>(Pharmacy & Finch) | ***6:00 PM - 10:00 PM*** |
| *JULY 01 & 02, 2005* | ***Sir John A MacDonald C. I.***<br>2300 Pharmacy Rd.<br>(Pharmacy & Finch) | ***10:00 AM - 10:00 PM*** |

# போவோமா ஊர்கோலம்

**கொழும்பு சர்வதேச விமான நிலையம்**, மதியம், ஒன்று முப்பது மணி எங்கிருந்து வந்தது இந்த புத்துணர்ச்சி? பத்துமணி நேரத்திற்கு மேலாக நித்திரையின்றி பிரயாணம் செய்த களைப்பே தெரியவில்லை. விமானத்திற்குள் இருந்த உடல் உளைவுகளும், கண் எரிச்சல்களும் தாய் மண்ணின் பசுமையில் போன இடமே தெரியவில்லை. தனிமையாக வெளிநாடு செல்வதில் உள்ள சௌகரியம் என்னவெனில் எவ்வளவு விரைவாக விமானத்தை விட்டும் விமானநிலையத்தை விட்டும் வெளியே வந்து விடலாமோ அவ்வளவு விரைவாக வந்து விடலாம். குடிவரவாளர் அதிகாரியின் சேவைக்கு இயன்றவரையில் முதலில் வந்து விட்டால், அவர்களுக்காக பின் நிற்கும் மக்கள் கூட்டத்தை பார்த்ததும் விரைவாக காரியத்தை முடித்து விட்டு விடுவார்கள். ஆடி அசைந்து ஆறுதலாக கடைசியாக சென்றால் தேவையற்ற கேள்விகளும், சோதனைகளுக்குள் ஆக்கப்படுவதையும் பல தடவைகள் அவதானித்து இருப்பதால் அவற்றிற்கு இடம் கொடுப்பதில்லை. புதிய இடத்திற்கு, அல்லது பல நாட்கள் போகாத இடத்திற்கு போகும் போது உண்டாகும் மிரட்சியுடனும் பயணக்களைப்புடனும் அவர்கள் முன் சென்று நின்றால், ஏதோ களவு செய்து விட்டு தம்மிடம் பிச்சை கேட்டு நிற்பதாக எண்ணிக் கொண்டு காரியம் பார்த்து போல சில அதிகாரிகள் நடந்து கொள்வதை உலகின் பல விமான நிலையங்களிலும் பார்த்திருப்பதால் அதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. கடவுச்சீட்டை அவர்களிடம் கையளித்து விட்டு அவர்களது முகத்தையே உற்றுப்பார்த்துக்கொண்டு நிற்பது கேள்வி ஏதும் கேட்டால் குரலை சற்று அழுத்தமாக்கி சுருக்கமாக கொடுக்கும் பதிலில் அனாவசிய கேள்விகள் இருக்காது என்பது கண்டறிந்த உண்மை. மடியில் சுமை இருந்தால் தானே வழியில் பயப்படவேண்டும்.

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

காரியத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்தால் மக்கள் கூட்டம், கூட்டிச் செல்ல வந்திருக்கும் தங்கையின் முகத்தை அந்தக் கும்பலிலே தேடலாம் என்றால் ஏதோ பஞ்சத்தில் அடிபட்டு, வெயிலில் காய்ந்த கருவாடுகள் போன்ற தோற்றங்களுடன், ஒரே மாதிரியான உருவங்கள் பலநூறு. இனம் காணுவது எவ்வாறு? தங்கையின் குரலுக்காக காதினை கூர்மையாக்கிக் கொண்டு மெதுவாக நடந்து வாகனத்தரிப்பு இடத்திற்கு வந்தால் இராணுவ சிப்பாய்கள் அங்கும் இங்குமாக நின்று போக்குவரத்தை சரிசெய்த வண்ணம் நின்றார்கள். சிங்கள மொழியும் பேசத் தெரியாததனால், ஓரமாக நின்று வந்து போகும் வாகனங்களை அவதானித்துக் கொண்டு நிற்கும் போது இப்படியான ஒரு சூழலில் முதன்முதலாக நான்பட்ட அனுபவம் 1986ஆம் ஆண்டு தந்தி தொலை தொடர்பு அலுவலகத்தில் குண்டு வெடித்து அல்லோல கல்லோலப்பட்ட போது சிங்கள கூட்டத்தினால் துரத்தப்பட்டதும், கைதுசெய்யப்பட்டு ஒரு நாள் சிறையில் இருந்ததும், அண்ணனின் தயவால் அடுத்த நாள் வெளியில் வந்ததும் மனக்கண்களில் படமாக ஓடியது. பிறந்த மண்ணில் வாழ வேண்டு என்ற ஆசைக்கு சாவு மணி அடித்த அந்த நிகழ்வு தாய்மண்ணின் கடந்த கால அவலங்களை இரைமீட்க வைத்தது. கவலையுடன் அரைமணி நேரம் சென்றது தெரியவில்லை. அதிகமாகி விட்ட சாலை போக்குவரத்துக்களால் காலதாமதமாகி வந்த தங்கையின் குடும்பத்துடன் ஊர்வலம் போவது போல ஊர்ந்து, ஊர்ந்து வீடு நோக்கி செல்லும் போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதி கொழும்பில் நல்ல மாற்றத்தை கொண்டு வந்து இருப்பதை அவதானிக்ககூடியதாக இருந்தது. காட்சிகள் கொழும்பில் நிற்பதை உணர்த்தினாலும், தெருவில் செல்லும் வாகனங்கள் ஏதோ வெளிநாட்டில் நிற்பது போன்ற பிரமையை உருவாக்கின. ரொறொன்ரோ சாலைகளில் ஓடும் வாகனங்களுக்கு ஈடாக Mercedes, BMW போன்ற பல வாகனங்கள். எங்கிருந்து கிண்டுகிறார்கள் பணத்தை? தெரிந்தால் கனடாவில் சனல் அடிக்க வேண்டி இருக்காது என்பது போன்ற எண்ணங்கள். தெய்வம் விடை கொடுத்தாலும் பூசாரியார் விடைகொடுப்பதில்லை என்பது போன்று அம்மாவை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆசைக்கு வாகன ஊர்வலம் இடைஞ்சல் கொடுத்தது. எதிர்காலத்தில் கொழும்பு செல்வதானால் விமான நிலையப் போக்குவரத்து மாலை எட்டு மணியில் இருந்து காலை எட்டு மணிக்கு முன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவு எடுக்க போக்குவரத்து நெரிசலும், வெய்யில் புழுக்கமும் வழி வகுத்தது. 45 நிமிடம் எடுக்க வேண்டிய பிரயாணம் இரண்டு மணிநேரம் எடுத்தது. ஆனாலும் உறவுகளைப் பார்க்கும் உற்சாகம் மனச் சோர்வுக்கு இடம் அளிக்கவில்லை.

கொழும்பில் முதல் செய்த வேலை கொண்டுபோன உடைகளை அப்படியே வைத்துவிட்டு மெல்லிய துணிகளாலான உடைகளை வாங்கியதுதான். அவ்வளவு புழுக்கம். அப்படியே மூன்று நாட்கள் கழிந்ததே தெரிய வில்லை. அம்மா முதல் உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் என பலரது சந்திப்பு. பத்து வருடங்களின் தடயங்கள் பலரது உருவங் களிலும் கோரத்தாண்டவங்கள் ஆடியிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. முதுமை என்பது இவ்வளவு விரைவாக விகாரமாக மனிதரை ஆட் கொண்டு விடுமா என்று எண்ணும் வகையில் பலரது தோற்றங்கள். நாட்டின் அவலநிலை கொடுத்த மாற்றங்களாகவும் இருக்கலாம். வீட்டை விட்டு வீதியில் சென்றால் Pizza Hut என்ன Mcdonalds என்ன, KFC என்ன தொடர்மாடிக் கட்டிடங்கள் என்ன என்று மேற்குலக நாடுகளின் பாதிப்பு வெகுவாகவே பதிந்திருந்தது. எதிர்காலத்தில் குளிரில் உறைந்து கனடிய மண்ணில் மடங்கிவிடாமல் ஓய்வு காலத்தில் ஊருக்கு சென்றால், முதுமையில் ரொறொன்ரோவில் அனுபவிக்கும் சுகத்தை ஓரளவுக்காவது இங்கு அனுபவிக்கலாம் என்ற நப்பாசையுடன் கூடிய நம்பிக்கையும் பிறந்தது.

மூன்றாம் நாள் இந்தியப் பயணம். இந்தியாவின் எந்தப்பகுதிக்காவது, அது தமிழ்நாடாக இருந்தாலும் கூட விமான நிலையத்தில் எம்மை கூட்டிச் செல்ல யாருமே இல்லை என்றால் வாழ்க்கையே சுத்தமாகி விடும். வந்த விமானத்திலேயே திரும்பி விடலாமா என்ற எண்ணத்தை உருவாக்கி விடும். சுங்கப் பரிசோதகர்கள் முதலாக, சுமை தூக்கும் கூலிகள் வரை நாம் அணிந்து இருக்கும் உடைகளின் உள்ளே மறைத்து வைத்திருக்கும் பணப்பையை உரிமையுடன் எடுத்து அதில் உள்ள அனைத்துமே தமது சொந்தம் என்று கொண்டாடும் அளவிற்கு நடந்து கொள்வார்களோ எனப் பயம் வரும் அளவிற்கு நடவடிக்கைகள் இருக்கும். இது அனுபவபூர்வமாக கண்ட உண்மை என்பதால் சென்னையில் இருக்கும் எனது மாமாவின் குடும்பம் விமான நிலையத்தில் நிற்பார்கள் என்பதால் ஒரு தைரியம் பிறந்தது. இது தமிழ் நாடு அல்லது இந்தியா பற்றிய ஒரு இழிவான கருத்தல்ல. சனத்தொகையால் வறுமையின் எல்லைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள் என்பதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் தான் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். விமான நிலையத்தை விட்டு உள்ளே சென்று விட்டால் வீதியில் சச்சின் முதல், செல்வி வரை தென்படுகிறார்களா எனத் தேடத்தூண்டும். திரைப்படங்களிலும், சின்னத்திரைகளிலும் காணும் தமிழ்நாட்டு வாழ்க்கையை அப்பட்டமாக அனுபவிக்கலாம். தமிழ்நாட்டிற்கு பன்னிரண்டு வருடங்களின் பின்பு சென்று இருந்ததால் கற்பனையில் இருந்த கடந்த கால சென்னைக்கும் தற்போதைய சென்னைக்கும் மிகப்பிரமாண்டமான மாற்றங்கள். சொல்லில் விளக்க முடியாது அதை சென்று பார்த்துத்தான் அனுபவிக்க வேண்டும்.

அடுத்த நாள் அதிகாலை இராமேஸ்வரம் பயணம். மாமனாரின் குடும்பத்தின் உதவியால் எம்மை அழைத்துச் செல்ல வந்தவர் அனுபவம் மிக்கவர். பிராமண சமூகத்தை சார்ந்தவர் என்பதால் உபாதை தரும் உணவுகளில், விடுதிகளில் இருந்தும், உபத்திரவம் கொடுக்கும் பிச்சை காரர்களிடம் இருந்தும் சாதுர்யமாக எம்மை பாதுகாத்து சென்னையில் இருந்து திருச்சி, மதுரை வழியாக இராமேஸ்வரம் வரை குளிரூட்டப்பட்ட சொகுசுவாகனத்தில் அழைத்துச் சென்றார். ரவிச்சந்திரன் எனும் அந்த நண்பர் எமது காலை, மதிய போசனங்களுக்காக அழைத்து சென்ற உணவு விடுதிகள் உண்மையிலேயே போற்றப்படக் கூடிய வகையாகவே இருந்தது. முன்பு சென்று வந்தவர்கள் சொன்ன உணவு சம்பந்தமான கோர அனுபங்கள் மனதில் ஒரு பயத்தை ஏற்கனவே ஏற்படுத்தி இருந்தது. மாட்டுத்தாவணி, திருப்பாச்செட்டி (திருப்பாச்சி), பரமக்குடி (கமலசாசன் பிறந்த ஊர்) என்று கிராமங்களின் ஊடாக பயணம் செய்கையில் வழியில் பார்த்த காட்சிகளும், கிராம மக்களும் ஏதோ ஒரு திரைப்படத்தை ஞாபகப்படுத்துவது போல இருந்தாலும் இராமேஸ்வரம் நெருங்க, நெருங்க கண்ட காட்சிகள் மனதிற்கு பாரமாகவும், கவலையை அதிகரிக்கவும் செய்தது. மடம் என்ற பகுதியில் தென்பட்ட ஈழத்தமிழர்களின் அகதி முகாமும், பனைகளுடன் தென்னம் சோலைகளும் காங்கேசன்துறையில் இருந்து ஊறணி, மயிலிட்டி ஊடாக தொண்டமானாறு பருத்தித்துறை பகுதிகளில் பயணிப்பது போன்ற உணர்வினை கொடுத்தது. அம்மாவின் விருப்பப்படி அப்பாவின் ஆன்ம சாந்தி கிரியைகளுக்காக இராமேஸ்வரத்தை நெருங்கிக் கொண்டு இருந்ததனால் அப்பாவை பற்றிய



இனிமையான கடந்த கால நினைவுகளும் நெஞ்சில் அலைமோதி அது கண்ணீராகக் காட்சிகளை மறைக்கவும், இராமேஸ்வரத்தை அடைந்தோம்.

அடுத்தநாள் அதிகாலையில் இராமேஸ்வரம் ஆலயத்தை சுற்றி இருக்கும் ஆச்சிரமங்களில் ஒன்றில் ரவிச்சந்திரன் அவர்களின் ஏற்பாட்டின்படி மிகச்சிறந்த முறையில் கிரியைகளை தொடர்ந்து, சரித்திர சமயப்பிரசித்தி பெற்ற தீர்த்தங்களில் நீராடி பூசைகளுடன் அப்பாவின் ஆன்மாசாந்தி பூஜைகள் நிறைவேறின. காலம் தாமதியாமல் மதியமே திரும்பும் வேளையில் இலங்கையில் இருந்து திரும்பிய சீதாதேவி தென்படுகிறாரா என்று குன்றின் மீது ஏறி நின்று அவதானித்த சிறீராமனின் பாதங்கள் பதிந்த உயர்ந்த மலையில் ஏறி நின்று காங்கேசன்துறை கண்ணில் தட்டுப்படுகின்றதா என்று பார்த்த பின்பு பயணம் மதுரைக்கு தொடர்ந்தது. அன்று மாலை மதுரை மீனாட்சி அம்மன் தரிசனம், பிரசித்தி பெற்ற முருகன் இட்லி கடையில் போசனம். இரவு மதுரையில் தங்கி, அதிகாலையில் இஸ்ட தெய்வம் பிள்ளையாரின் பிரசித்தி பெற்ற தலம் பிள்ளையார் பட்டி பயணம் ஆரம்பமானது. காலை பத்துமணி அளவில் அவரைத் தரிசித்துவிட்டு, புதுக்கோட்டையில் மதிய போசனம். (நடிகர் ஜெமினி கணேசனின் பிறந்த இடம்) சரவணன் என்ற பெயரில் பலர் இருப்பார்களோ? திரைப்படத்தின் உபயத்தால் கிடைத்த கேள்விகளுடன் திருச்சி மலைக்கோட்டை பிள்ளையாரையும் தரிசித்துவிட்டு ஒரே மூச்சில் சென்னை வந்து விட வேண்டும் என்று புறப்பட்டதால் இருட்டத் தொடங்கியதும், எதிரில்வரும் வாகனங்கள் கண்மண் தெரியாமல் நேராக எமது வாகனத்திற்குள் வந்து விடுமோ என கிலி எடுக்கும் வகையில் மூடத்தனமாக முடிவெடுத்து விட்டோமா என்று பயந்த வண்ணம் இரவு 12 மணிக்கு சென்னை திரும்பி வந்தடைந்தோம். உடல் நலமற்ற அம்மா பல நாட்கள் பயணம் செய்யக் கூடாது என்பதற்காகவே இயன்ற வரையில் பயணநாட்களை சுருக்க வேண்டி இருந்தது. இன்று எண்ணிப் பார்க்கையில் இன்னும் பல இடங்களை பார்த்து இருக்கலாமோ என்று எண்ணத்தோன்றினாலும், இன்னுமொரு தடவை திரும்பச் செல்லலாம் என்று மனம் ஆறுதல் கூறுகின்றது.

சென்னையில் பிரசித்தி பெற்ற திருத்தலங்களுடன், சரவணபவன் போன்ற சிறந்த உணவு விடுதிகளையும், போத்தீஸ், குமரன் சில்க், சாந்தி தியேட்டர், 'மன்மதன்' திரைப்படம் போன்றவற்றையும் MGR தோட்டம், இசையரசி M.S சுப்புலட்சுமி போன்றவர்கள் வாழ்ந்த இடங்களையும் தரிசித்த பின்பு ஒரு கிழமை இந்திய பயணத்தை முடித்து கொண்டு நலமே கொழும்பு திரும்பினோம்.

*பயணம் தொடரும்...*

பரம்ஜி

ஒரு சாதாரண மனிதன்




உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?

நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

பரம்ஜி - 416.230.1107

PARAM. G GNANASWARAN
Sales Representative

HOME LIFE GTA REALTY INC.
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

HOMELIFE HIGHER STANDARDS

416.321.6969
905.670.9969
(Mississauga)
paramg@themathuram.com

# பிரேசிலை பழிதீர்த்துக் கொண்டது ஆர்ஜென்டீனா

### உதைபந்தாட்டம்
### உலககிண்ணம் - 2006

ஜேர்மனியில் அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் விளையாடும் வாய்ப்பை ஆர்ஜென்டீனா பெற்றுள்ளது. தென் அமெரிக்கா விலிருந்து பத்து நாடுகள் உலகக் கோப்பை போட்டியில் விளையாட உள்ளன. அதற்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் அந்த கண்டத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன. பல்வேறு நாட்டு அணிகள் பங்கேற்றுள்ளன.

**எஸ். கணேஷ்**

புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் வலுவான ஆர்ஜென்டீனா - பிரேசில் நாடுகள் பலப்பரீட்சை நடத்தின. அதில் ஆர்ஜென்டீனா 3 - 1 என்ற கோல் கணக்கில் தனது பரம வைரியான பிரேசிலைத் தோற்கடித்து புள்ளிப் பட்டியலில் முதலிடம் பெற்றது. அந்த அணியின் ஹெர்னான் கிரெஸ்போ 3 மற்றும் பத்தாவது நிமிடத்தில் அடுத்தடுத்து கோல்களை அடித்து ஆர்ஜென்டீனாவை 2 - 0 என முன்னிலைப் படுத்தினார். 18-வது நிமிடத்தில் ஜுவன் ரோமன் ரிகுலெம் மற்றொரு கோலை அடித்தார். 71-வது நிமிடத்தில் ராபர்டோ கார்லஸ் அடித்த கோல் பிரேசில் அணிக்கு ஆறுதலாக மட்டுமே அமைந்தது. 1978, 1986 ஆம் ஆண்டுகளில் உலகக் கோப்பையை வென்றுள்ள ஆர்ஜென்டீனா, உலகக் கோப்பை போட்டிக்கு ஒன்பதாவது முறையாக தொடர்ந்து தகுதி பெறுவது குறிப்பிடத்தக்கது. 15 சுற்றுகளின் முடிவில் ஆர்ஜென்டீனா 31 புள்ளிகளைச் சேர்த்து தகுதி பெற்றுவிட்டது. அதேசமயம் நடப்பு சாம்பியன் பிரேசில் 27 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், 23புள்ளிகளுடன் ஈகுவ டோர் அணி மூன்றாம் இடத்திலும் உள்ளன. பராகுவே 22 புள்ளிகளுடன் நான்காம் இடத்தில் உள்ளது. இன்னும் மூன்று சுற்று ஆட்டங்கள் மீதமுள்ளன. அவற்றின் முடிவில் தகுதி பெறும் மற்ற நாடுகள் எவை என்பது தெரியவரும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பராகுவே அணியை 4 - 1என்ற கோல் கணக்கில் பிரேசில் வென்றது. அந்த ஆட்டத்தில் பிரேசில் அணிக்கு ரொனால்டோ விளையாடவில்லை. ஆட்டம் முடிந்ததும் "உலகக்கோப்பை போட்டிக்கு 99.9 சதவீதம் தகுதி பெற்றுவிடுவோம்" என பிரேசில் அணியின் பயிற்சியாளர் கார்லஸ் அல்பர்டோ ஃபெரைரா நம்பிக்கையுடன் கூறினார். அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் 32 நாடுகள் விளையாட உள்ளன. ஐந்து நாடுகள் ஏற்கனவே தகுதி பெற்றுள்ளன. ஈரான், ஜப்பான், சவூதி அரேபியா, தென் கொரியா ஆகிய நாடுகள் ஆசியாவிலிருந்து அப்போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெற்றுள்ளன. தென்அமெரிக்காவிலிருந்து ஆர்ஜென்டீனா அந்த வாய்ப்பை பெற்றுள்ளது. போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் ஜேர்மனி ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டது.

ஆசியாவிலிருந்து தகுதி பெறும் முதல் நாடாக ஜப்பான் திகழ்கிறது. அதைத்தொடர்ந்து ஈரான், தென் கொரியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளும் உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. உலகக்கோப்பை போட்டிக்கான ஆசிய தகுதிப் போட்டிகள் 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாக நடைபெற்று வருகின்றன. பாங்கொக்கில் புதன்கிழமை நடைபெற்ற 'பி' பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் 2 - 0 என்ற கோல் கணக்கில் வட கொரியாவைத் தோற்கடித்தது ஜப்பான். இதையடுத்து ஆசியாவிலிருந்து உலகக் கோப்பைக்கு தகுதி பெறும் முதல் நாடானது ஜப்பான். டெஹ்ரானில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஈரான் 1 - 0 என்ற கோல் கணக்கில் பஹ்ரைன் அணியைத் தோற்கடித்து, உலகக்கோப்பையில் விளையாடும் வாய்ப்பை பெற்றது. இவ் வெற்றியையடுத்து, ஆசிய தகுதிப் போட்டிக்கான 'பி' பிரிவு பட்டியலில் 13 புள்ளிகளுடன் ஈரான் முதலிடத்தையும், 12 புள்ளிகளுடன் ஜப்பான் இரண்டாம் இடத்தையும் பெற்றன. பஹ்ரைன் நான்கு புள்ளிகளையும், வடகொரியா புள்ளி ஏதும் சேர்க்காமலும் உள்ளன. 'ஏ' பிரிவிக்கான ஆசிய தகுதிப் போட்டி ஒன்றில், தென்கொரியா 4 - 0 என்ற கோல் கணக்கில் குவைத் அணியைத் தோற்கடித்தது. 'ஏ' பிரிவு பட்டியலில் சவூதி அரேபியா 11 புள்ளிகளுடன் முதலிடத்தையும், பத்து புள்ளிகளுடன் தென்கொரியா இரண்டாம் இடத்தையும் பெற்று உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

### கிரிக்கெட்

மேற்கிந்திய தீவுகள் Vs பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் ரெஸ்ற் கிரிக்கெட் போட்டியை 276 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது மேற்கு இந்திய தீவுகள் அணி. கிறிஸ் கெயில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி அணியின் வெற்றியை விரைவுபடுத்தினார். இதன் மூலம் கிட்டதட்ட ஓர் ஆண்டு இடைவெளிக்குப் பிறகு ரெஸ்ற் போட்டியில் முதல் வெற்றியை மேற்கு இந்தியத் தீவுகள் அணி பெற்றுள்ளது. இதற்கு முன் 2004 யூன் மாதம் வங்கதேசத்தை மேற்கு இந்தியத் தீவுகள் வென்றது. அதன்பிறகு இங்கிலாந்துடன் நாலு ஆட்டங்களிலும், தென் ஆபிரிக்காவுக்கு எதிராக இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்தது. தென்ஆபிரிக்காவுக்கு எதிரான இரண்டு ரெஸ்ட் போட்டிகள் சமநிலையில் முடிந்தன. 573 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் நாலு விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்கள் என்ற புள்ளிவிபரத்துடன் நாலாவது நாளான ஞாயிற்றுக்கிழமை ஆட்டத்தை பாகிஸ்தான் தொடர்ந்தது. ஆனால் உணவு இடைவேளைக்கு சிறிது நேரத்துக்குப் பிறகு அனைத்து துடுப்புகளையும் இழந்து 296 ஓட்டங்களை மட்டுமே அது சேர்த்தது. அதரடி நாயகன் ஷாகித் அஃப்ரிதி 122 ஓட்டங்களையும், ஆஸிம் கமால் 55 ஓட்டங்களையும் சேர்த்த போதும் அது வெற்றிக்கு போதுமானதாக இல்லை. மேற்கு இந்தியத் தீவுகளின் கிறிஸ் கெயில் 91 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். கடைசி நாலு விக்கெட்டுகளையும் கெயில் வீழ்த்தினார். 19 ஓட்டங்களுடன் கடைசி நாலு விக்கெட்டுகளும் வீழ்ந்தன.


கிங்ஸ்டனில் நடைபெற்றுவந்த இரண்டாவது கிரிக்கெட்டு ரெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை 136 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் தோற்கடித்தது. இதையடுத்து இரண்டு ரெஸ்ட் கொண்ட தொடர் 1-1 என சமன் அடைந்தது. பார்படாஸில் நடைபெற்ற முதல் ரெஸ்டில் மேற்கு இந்திய தீவுகள் 276 ஓட்டங் கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

**சபீர் அகமது** - போட்டியின் கடைசி நாளான செவ்வாயக்கிழமை ஒரு மணி நேரத்திலேயே ஆட்டம் முடிவுக்கு வந்தது. 280 ஓட்டங்களை வெற்றிக்கான இலக்காகக் கொண்டு விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் நாலாம் நாள் முடிவில் ஆறு விக்கெட்டுகளை இழந்து 114 ஓட்டங்களை சேர்ந்திருந்தது. ஐந்தாம் நாளான செவ்வாய்க்கிழமை ஆட்டத்தில், மேலும் 29 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தது. கடைசி நாலு விக்கெட்டுகளில் சபீர் அகமது மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார். டேனிஷ் கனேரியா மற்றொரு விக்கெட்டை வீழ்த்தினார். கனேரியா கணக்கில் ஐந்து விக்கெட்டுகள். 1988 ஆம் ஆண்டுக்குப் பிறகு மேற்கிந்தியத் தீவுகளில் பாகிஸ்தான் அணி பெறும் முதல்வெற்றி இது என்பது குறிப்பிடத்தக்கது. இன்சமாம் தலைமையிலான அணிக்கு அந்த சிறப்பு கிடைத்துள்ளது. கடைசியாக 1988இல் கயானாவில் நடைபெற்ற போட்டியில் அந்த அணி வெற்றி பெற்றது.

**ஷெப்பர்டு ஓய்வு** - இந்த போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட் நடுவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார் இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் ஷெப்பர்டு. போட்டி முடிவுற்றதும் இரு அணி வீரர்களும் அவரது அறைக்குச் சென்று ஷெப்பர்டுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

### ரெனிஸ் French Open - 2005



பாரிஸில் நடைபெற்று முடிந்த French Open இல் ஆண்கள் பிரிவில் ஸ்பெயினைச் சேர்ந்த நடாலும் பெண்கள் பிரிவில் பெல்லியத்தைச் சேர்ந்த ஹெனினும் வெற்றி வாகை சூடினர்.




**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer* - கதிர்- 416-750-8118

2381 Eglinton Ave., E.,

Kennedy / Eglinton, Scarborough



**ELECTRICAL WORKS**



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880






# வீட்டின் விலையில் மீண்டும் அதிகரிப்பு

## தொடர் - 208

மே மாதம் 2005ஆம் ஆண்டு வீட்டு விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வீட்டுவிலையில் நீண்டகால அதிகரிப்பு தொடர்வதனை மே மாத அறிக்கை காட்டியுள்ளது. பொருளாதார நிபுணர்களின் கூற்றிற்கு மாறாக வீட்டின் விலையில் தொடர்ந்து அதிகரிப்பு ஏற்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. மே மாதமும் ஆதனம் விற்றல் வாங்கலில் சாதனை மாதமாக வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்வது போல புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதனம் நிர்மாணிக்கும் நிறுவனங்களும் விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன. கடந்த மாதம், (மே 2005), 9,209 வீடுகள் கைமாறியுள்ளன. யூன் 2004 இல் Toronto Real Estate Board இனால் பதியப்பட்ட ஆகக்கூடியதாக விற்கப்பட்ட வீடுகள் 9,275 ஆகும். மே 2005 இல் இதனைவிட 1% குறைவாகக் காணப்பட்டாலும் 2005 மே மாதத்திலேயே ஆகக்கூடிய வீடுகள் விற்கப்பட்டுள்ளன. மேமாத விற்பனையில் இது ஒரு சாதனை மாதமாகும்.

பொதுவாக மே மாதமானது மாதங்களில் வீட்டு வியாபாரத்தில் ஒரு கனதியான மாதமாகக் காணப்படுவது இயல்பு. யூன் மாதக்கடைசியில் கோடைகால விடுமுறைக்கு மக்கள் செல்வதற்கு முன்பாக வீடு விற்பது வாங்குவது இயல்பு. காலநிலையின் சாதகம் போன்ற



வற்றையும் கூறலாம். மேலும், வீட்டு வியாபாரத்தில் குறுகிய காலம் பிரகாசமாகத் தோன்றுகின்றபோதும், நீண்டகால நோக்கு அவ்வாறு தோன்றவில்லை என பொருளாதார எதிர்வுகூறும் அறிஞர்கள் கூறுகின்றனர். இதற்கு வட்டிவீதம் அதிகரிப்பு ஏற்படக்கூடிய சாத்திய கூறுகளும் காரணமாக முன்வைக்கலாம். பொருளாதார நிபுணர்களால் கூட ஆதனத்தின் கடந்த 9 வருட விலை அதிகரிப்பிற்குரிய காரணத்தை முன்வைப்பதில் மிகநெருக்கடியாக உள்ளது. குறைந்த வட்டிவீதம், கனடியப் பொருளாதாரநிலை, புதிதாக நாட்டிற்குள் வருபவர்களின் அதிகரிப்பு போன்றவற்றைக் காரணங்களாகக் கூறலாம். வீட்டின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டபோதும் வட்டி வீதத்தின் அளவு குறையாக இருப்பதால் மாதாந்த கொடுப்பனவில் பெரியமாற்றம் ஏற்படவில்லை. இருந்தும், ஆதனம் வாங்குபவர்கள் தமது நிலைமையை கணக்கிட்டு வாங்கல் செய்வதே எதிர்காலத்தில் ஏற்படும் பலசிக்கல்களை தவிர்க்க கூடியதாக இருக்கும், வட்டி வீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டால் மாதாந்த கட்டுப்பணம் கட்டுக்கடங்காமல் போகலாம் முன் எச்சரிக்கை தேவை?

இன்றைய நிலையில் சிறிய வீடுகள் ( அளவில் சிறியவை), கூட்டகம் (Condominium) போன்ற வற்றை மக்கள் வாங்க விரும்புவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. Baby Boomers வேலையிலிருந்து ஓய்வு பெறுதலும் குடும்பங்களின் அளவு சிறுப்பதுமே இதற்குரிய காரணமாகலாம்.

ரொறொன்ரோப் பகுதியில் (Toronto Real Estate Board) மே மாதத்தின் சராசரி வீட்டுவிலை $346,474 இந்த பெறுமதி இதற்கு முந்திய மாதத்தைவிட (ஏப்ரல் 2005) 1% இனால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (ஏப்ரல் 2005 சராசரிவிலை $342,032)

**நாமும் நமது இல்லமும்**


**ராஜா மகேந்திரன்**

மேலும் மே 2005இன் சராசரி வீட்டுவிலை மே 2004 ஐ விட 6% இனால் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மே 2004 இல் சராசரி வீட்டுவிலை $325,501 முக்கியமாக முதல்தரமாக வீடு வாங்குபவர்களே வீட்டுவிலையின் சீராக வைத்திருக்க உதவுகின்றனர். இந்த நிலை எவ்வளவு காலம் தொடரும் என்பதற்கு வட்டிவீதமும் பதில் சொல்லக்கூடும். புதிதாக நிர்மாணிக்கும் வீடுகளின் விலை தொடர்ந்து அதிகரித்து செல்வதால் Resale வீடுகளின் விலையில் பாரிய இறக்கத்தை எதிர்பார்ப்பது எவ்வளவிற்கு சரியாக இருக்க முடியும்? கட்டிட நிர்மாணத்துறையில் தொழில்புரிபவர்களின் பற்றாக்குறை பாவிக்கப்படும் பொருட்களின் விலை அதிகரிப்பு ரொறொன்ரோ பெரும்பாகத்தில் ஏற்படும் நிலத்தின் தட்டுப்பாடு புதிதாக நிர்மாணிக்க இருக்கும் ஆதனங்களின் விலையை உறுதியாக வைத்திருக்கும் அல்லது அதிகரித்தே செல்ல வாய்ப்பு இருக்கும் என்றே தோன்றுகின்றது.



*மில்லியனராகும் வீட்டு உரிமையாளர்கள்: கடந்த ஒன்பது வருடங்களில் ஆதனத்தில் ஏற்பட்ட அதீத விலை அதிகரிப்பு உலகின் பல நாடுகளிலும் புதிய பல ஆயிரம் மில்லியனெயர்களை உருவாக்கியுள்ளதாக அண்மையில் வெளியான World Wealth Report தெரிவிக்கின்றது. ஒரு காலத்தில் மில்லியனெயர் என்றால் Rolls Royce ஓடுபவர்களாக இருந்ததாகவும் இந்தக்காலத்தில் அந்த நிலை மலை ஏறிவிட்டதாகவும் புதிய அறிக்கை தெரிவிக்கிறது. சாதாரண தொழிலாளர்களில் பலர் தகுந்த நேரத்தில் சரியான ஆதனங்களை வாங்கி விற்றதால் இந்தக் கூட்டத்தில் சேர்ந்துள்ளார்கள். டிசெம்பர் 2004 இல் கனடாவில் உள்ள மில்லியனெயர்கள் எண்ணிக்கை 217,000 ஆக 8,3% ஆல் இதற்கு முந்திய ஆண்டை விட அதிகரித்துள்ளார்கள். இதில் அனேகர் Toronto Real Estate Board (GTA) பகுதியில் வசிக்கின்றனர். (Millionaire Class என்பதன் வரைவிலக்கணம் குறிப்பிட்டவரின் பெறுமதி அமெரிக்க டொலரில் ஒரு மில்லியன் டொலரைக் கொண்டு இருக்க வேண்டும்.)*


Neilson/Sheppard




Detached 2- Storey
5 +1 Bedrooms, 2 kitchens
New Windows
Easy Access to Shopping, TTC
$249,900

Taunton(Steels)/Westny




Brand New Detached 2-Storey
Tribute Builders, 9'Ceiling
50' Frontage, over $40k Upgrades
3198 SFT, Hardwood Floor
4 Bedrooms, 4 washrooms
$439,900

Old Harwood/Hwy#2



Detached 2- Storey
4 +1 Bedrooms, 2 kitchens,
4 Washrooms
Walkout Basement
$339,900


Warden/Lawrence



Free Standing building
Central Location
Clean Office Space
Close To Major Hwys
$1,200,000

Lawrence/Beechgrove
LAND FOR SALE
One Acre Vacant Industrial Lot
Survey Available
Lot Is Graded + Flat.
Easy Access To Hwy 401
Plans For 20,000 Sft Warehouse
Approved + Included
$349,000

Markham/Denison
Detached-Storey
Bedrooms: 4+2
4 Washrooms
Kitchen: 2,
Finished Bsmt. With
Sept.Entrance
$364,000



HOMELIFE
HIGHER STANDARDS

Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397
Off : 416.321.6969



HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd. Suite 206. Toronto, ON M1S-3Y3

# அரங்க நடிகர்

(கடந்த இதழ் தொடர்ச்சி - 2)

குரலையும் உடலையும் சரியான முறையில் வைத்திருக்க வேண்டிய பொறுப்பு நடிகர் ஒவ்வொருவருக்கும் உண்டு. இல்லையேல் அவற்றை அரங்கில் தேவைக் கேற்பப் பயன்படுத்த முடியாது இடர்ப்பட நேரிடும். தனது உடலை, தனது குரலைத் தானே கட்டுப்படுத்த முடியாத நிலையில், தாங்கும் பாத்திரத்தின் இயல்புகளுக்கேற்ப நடிக்க முடியாமலும் போய்விடும்.

உடல் நலம்

உடல் நலம் அரங்க நடிகரின் மூலதனம். உடல் நலம் என்னும் தொடர் அடிப்படையான சுகாதாரத்தை மட்டும் இங்கு குறித்து நிற்கவில்லை. நோய்நொடி இல்லாத உடல் நலத்துக்கும் அப்பால் நடிப்புடற் சிறப்பியல்பு களையும் இது தாங்கி நிற்கிறது. அதாவது, தொடர்ச்சியான பயிற்சியால் பலவிதமான உணர்ச்சிகளையுங் காட்டி நடிக்கக்கூடிய வகையில் உடல் தகுதிநிலையிலும் தயார் நிலையிலும் இருத்தல் வேண்டும். பலவீனம், சோர்வு, களைப்பு எதுவும் இல்லாது அரங்கில் நின்று நடிப்பதற்கு உடல் உறுதி அவசியம். சுவர் இருந்தாற்றான் சித்திரம் கீறலாம் என்பது பழமொழி. உடல் நலமாக இருந்தாலே நடிக்கலாம் என்பது நாடகமொழி. ஒரு வீணை வித்துவானுக்கு வீணை முக்கியமாவதுபோல நடிகருக்கு அவரது உடம்பு முக்கியமான கருவியாகின்றது.

**கவிஞர் வி. கந்தவனம்**

நடிப்பில் நடிகரின் உள்ளம் மட்டுமல்லாது முழு உடம்பும் ஈடுபடல் வேண்டும். தோற்ற நிலை (posture), அவிநயம் (gesture), நடை மற்றும் அரங்க இயக்கம் அனைத்திலும் உடல் முழுவதும் பங்குகொள்ளல் வேண்டும். இந்த வகையில் நடனத்துக்கும் நடிகரின் அரங்காற்றுகைக்கும் (theatrical performance) நெருங்கிய தொடர்புண்டு.

தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் 'மெய்ப்பாட்டியல்' என்றொரு பகுதி வருகிறது. சுவைகளை வெளிக்காட்டுவதற்கு உடல் முழுவதையும் ஈடுபடுத்த வேண்டும் என்பதை என்றோ தமிழர் உணர்ந்து கொண்டதை இப் பதப் பிரயோகம் காட்டுகின்றது.



உடல் முழுவதையும் நடிப்புக்குப் பயன்படுத்துவதற்கு அதன் வல்லமையை நடிகர் அறிந்திருத்தல் வேண்டும். அந்த வல்லமையில் அவர் முழுத் தேர்ச்சி பெற்றிருத்தலோடு அதனைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் வேண்டும். அப்பொழுதுதான் தான் நினைப்பதை - செய்துகாட்ட விரும்புவதை தனது உடலைக்கொண்டு அவரால் நடைமுறைப்படுத்த முடியும். அத்தகைய நடிகரே அவையோர் கவனத்தை ஈர்க்க வல்லவராவர்.

நடிப்பதற்கு வேண்டும் உடற்பயிற்சி பற்றிய மேலதிக தகவல்களுக்கு Michel Saint-Denis என்பவர் எழுதிய Training for the Theatre (1982) என்ற நூலை உசாவுக!.

குரல் வளம்

குரல் வளம் சங்கீத வித்துவான்களுக்குத்தான் வேண்டும் என்றில்லை. அரங்க நடிகருக்கும் அது மிகவும் இன்றியமையாதது. நடிகரைப் பொறுத்தவரை குரல் வளம் என்பது அவையினர் அனைவருக்கும் கேட்கக்கூடிய குரல். கூடவே அவையோர் கேட்க விரும்பும் குரலாகவும் அது இருக்க வேண்டும். தேவையான முறையிற் பயன்படுத்து வதற்கும் அது ஏற்றதாக வேண்டும்.

சிலரது குரல் இயற்கையாகவே வளமானதாக இருக்கும். வளமானதாக இல்லாது போனாலும் பயிற்சி முறையால் அதனைக் கவர்ச்சி ஆக்கலாம். குரல் பிறந்து வரும் மிடறு, அதனுடன் தொடர்புடைய கழுத்து, மூக்கு, வாய், நெஞ்சு, வயிறு போன்ற அவையவங்களைச் சரியாகப் பயன்படுத்துவதாலும் திருத்தமான சுவாசிப்பு முறையாலும் குரலைக் கவர்ச்சியாக்க முடியும்.

குரல் வளமாக இருந்தாலும் அதனைத் தேவைக்கேற்பப் பயன்படுத்துவது என்பது ஒரு கலை. இந்தக் கலையில் நடிகர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். சொற்களுக்குத் தக, சொற்றொடர்களுக்குத் தக, அவை தெரிவிக்கும் கருத்துக்களுக்கு அமைய, அவற்றின் அழுத்தங்களுக்கும் ஏற்ப குரலை 'மீட்டும்' வல்லமையுள்ள நடிகரே சிறந்த நடிகராக முடியும். குரலில் ஒலி வேறுபாடுகளைச் செய்யக் கூடியவராக நடிகர் இருத்தல் வேண்டும். குரலில் ஏற்ற இறக்கங்களைச் செய்யவும் மெலியதும் வலியதுமான தொனி மாற்றங்களைத் தோற்று விக்கவும் பயிற்சி இன்றியமையாதது.

பேச்சு முறையும் குரலோடு தொடர்புடைய தொன்றாகும். பாத்திரங்களுக்கேற்ப பேச்சுத் தமிழ் அல்லது செந்தமிழ் பேசவேண்டியிருக்கும். எவ்வகைத் தமிழ் பேசினும் சொற்கள் முறையாக உச்சரிக்கப்படல் வேண்டும். உச்சரிப்பு அவையிலே கடைசி வரிசையில் இருப்பவருக்கும் கேட்க வேண்டும். சொற்களை உணர்ச்சி களுக்குத் தகச் சொல்வதற்கு உதவியாக இருப்பவை உச்சரிப்பும் தொனியுமே.

தமிழ்ச் சொற்களைச் செவ்வனே உச்சரிப்பதற்கு எழுத்தியல் அறிவு உதவியாக இருக்கும். முக்கியமாக வல்லின மெல்லின இடையின இயல்புகளையும் எழுத்துக்களின் மாத்திரைகளை யும் சொற்கள் புணரும் முறைகளையும் நடிகர் அறிந்திருப்பது நல்லது.

பாத்திரங்களின் குணவியல்புகளுக்கும் குரலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தொனி மாற்றங்களால் குணவியல்புகளை எளிதிலே அவையோர் மனத்திற் பதியவைக்கலாம்.

குரலை ஆட்சி செய்வதற்குப் படிமுறையான பயிற்சி வேண்டும். மிகையான அல்லது ஒவ்வாத பயிற்சி முறைகள் குரல் வளத்தைப் பாதிக்கவுங் கூடும்.

குரற் பயிற்சி தொடர்பான மேலதிக விவரங்களுக்கு The Actor and His Voice (1988) என்ற நூலின் உதவியை நாடுக. இது Cicely Berry (Voice Director of the Royal Shakespeare Company in England) என்பவரால் எழுதப் பெற்றது.



- தொடரும் ...


# SRI PARADISE Catering & Take -out

416.269.4509

292 Markham Road, Scarborough, ON



| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
|---|---|---|---|---|---|
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
|---|---|---|
| $2.99 | $1.99 | $2.99 |

*Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# சுகம் சுகமே

*தயாரிப்பாளர் ஸ்ரீமுருகனுடன் ஒரு நேர்காணல்*

லோகன்: வணக்கம் ஸ்ரீ முருகன் அவர்களே!

ஸ்ரீமுருகன்: வணக்கம் லோகன்... வாங்கோ... எப்பிடி சுகம்..?

லோகன்: சுகம்... சுகமே..!

ஸ்ரீமுருகன்: (புன்னகைக்கிறார்) நல்லது.. சொல்லுங்கோ..!

லோகன்: ..உங்களிட்டை ஒரு பேட்டிக்காக வந்திருக்கிறன்...

ஸ்ரீமுருகன்: அதுக்கென்ன இருங்க... (திருமதி. ஸ்ரீமுருகன் எட்டிப் பார்த்துவிட்டுச் செல்கிறார்) (அமர்ந்ததும் பேட்டி ஆரம்பிக்கிறது)

லோகன்: பேட்டி, கனேடிய தமிழ்த் திரைப்படம் தொடர்பானதுதான்... உங்களிட்டை சில கேள்விகள்...

ஸ்ரீமுருகன்: தாராளமா... தெரிஞ்சதை சொன்னாப் போச்சு...சரி கேளுங்கோ..

லோகன்: முதலாவதா...இங்கத்து தமிழ் சினிமா வளர்ச்சி பற்றி... நீங்கள் வளர்ந்து வரும் கனேடியத் தமிழ்த் திரைப்படத் துறையில் தயாரிப்பாளராகவும் நடிகராகவும் இருக்கிறதால..., இத்திரைப்பட வளர்ச்சி எத்தகைய நிலையில் இருக்கிறதென்று சொல்லமுடியுமென்று நினைக்கிறன்... சொல்லுவீங்களா?

ஸ்ரீமுருகன்: நான் சம்மந்தப்பட்ட படங்களை வெச்சா? நான் மட்டுமில்ல இஞ்சை இருக்கிற எல்லாத் தயாரிப்பாளர்களும் நினைக்கின்ற தன்மை இருக்கிறதை உணர்கிறன். இது இந்தத் திரைப்படத்துறை வளர ஆரோக்கியமான நிலமை. ஆரம்பத்திலை மந்தமாக ரெண்டு மூண்டு வருடத்துக்கு ஒரு படம் எண்டு ஆரம்பிச்சது இப்போ வருடத்துக்கு ரெண்டு மூண்டு படம் எண்டு வெளிவருகுது. படங்களின்ர எண்ணிக்கை மட்டுமில்லை ரசிகர்களின் ஆதரவும் கூடிக்கொண்டேதான் போகுது. தொழில் நுட்பமும் கூடிக்கொண்டேதான் போகுது. எங்கட மக்களுக்கு எங்கட படங்கள்மேல நம்பிக்கை வந்திருக்கிறதை அண்மையில் வந்த படங்களிலிருந்து கண்டிருப்பீர்கள்தானே... உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை..

(அந்நேரம் திருமதி. ஸ்ரீமுருகன் அவர்கள் சிற்றுண்டியும் தேனீரும் கொடுக்கிறார்)

இவதான் என் திருமதி..ஒரு வெகுமதி...எனது திரைப்படத் தயாரிப்பின் பின்னால் இவவினதும் உழைப்பும் ஒத்தாசையும் இருக்கு... எனக்குச் சில்லு மாதிரி...(சிரிக்கிறார்)...அதனால ஓடுறன்..!

லோகன்: எல்லாரும் மனைவி ஸ்ரியறிங் மாதிரி எண்டு சொல்லேக்கை நீங்கள்தான் எதார்த்தமா அவவின்ர சேவையை உயத்திச் சொல்லியிருக்கிறீங்கள்.... (அவ நாணத்துடன் செல்ல) சரி நாங்கள் தொடருவம்...கனடா, தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த நாடாக இருக்கையில் இங்கு தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களில் அந்த வளர்ச்சி பிரதிபலிப்பதாய் இல்லையே என்ற குறை சொல்லப்படுகிறதே இதற்கு நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்?



லோகன்: இல்லை, இதுவரை காலமா எங்கட ஒட்டுமொத்த சினிமா முயற்சிகளின் அடிப்படையில் தொழில் நுட்பம் கதை, ரசிக ஆதரவு எல்லாம் பற்றி...

ஸ்ரீமுருகன்: இஞ்ச கன படங்கள் தயாரிக்கப்பட்டிருக்குது. சிலது வெளி வந்திருக்கிறது. சிலது வெளிவர இருக்கிறது. எல்லாமே எங்கள் படைப்புகளே என்று சொல்ல

ஸ்ரீ முரு: இது உங்கட கேள்வியா?

லோகன்: இல்லை...,அந்தச் சிரமங்கள் அறிஞ்சிருக்கிறன்... இருந்தும், இப்பிடிக் கேட்கிறவர்க்கு என்ன பதிலை நீங்கள் சொல்வீர்கள்? அவர்களுக்கு உங்கட அனுபவம் இல்லாததால்த்தானே கேட்கிறார்கள்...

ஸ்ரீமுரு: அவர்கள் எங்களிட்டையிருந்து “ஜெரசிக் பாக்” போன்ற படங்களை எதிர்பார்க்கிறார் களாக்கம்... நல்லது. இப்பத்தான் தவழ்கிறோம்... எழுந்து ஓடி ஒருநாள் வருவோம்...சரி பதிலுக்குப் போவம்...



கனடாவிலை நல்ல தொழில் நுட்பம் இருக்கிறதெண்டாலும்...அது சும்மா கிடைக்குமா? ஆங்கிலப் படத்துக்கு செலவழிக்கிற அளவு செலவிட்டு தமிழ்ப்படம் எடுக்கிறத்துக்கு நாம் தயாரில்லை. போட்டதையெண்டாலும் எடுக்கவேண்டுமே என்பதுதான் இப்போதய நிலமை...காலங்கள் மாறி எங்கள் தயாரிப்புக்கு ரசிகர்கள் திரண்டு வந்து ஆதரவு தாறபோது அதிஉயர்வான தொழில் நுட்பத்தில் படம் எடுப்போம். உள்ள வசதியை வைத்துக்கொண்டு சிறப்பான படங்களைத் தாறதே எங்கட இப்போதய நோக்கம்.

லோகன்: இரசிகர்கள் திரண்டு வந்து ஆதரவு தரவேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள், அதில் தவறில்லைத்தான். திரைப்படந் தயரிப்பது ஒரு ஆவலின் வெளிப்பாடாய் இருக்கின்றபோதும் அது தரமானதாயும் இருக்க வேண்டுமென்று இரசிகர்கள் எதிர்பார்ப்பது தவறா இல்லை தரம் பார்க்காமல் எம்மவர் முயற்சிக்கு அவர்கள் ஆதரவு தரலாந்தானே என அங்கலாய்க்கிறீர்களா?

ஸ்ரீமுரு: இல்லையில்லை, இரசிகர்கள் தரமானதை எதிர்பார்ப்பதில் தவறில்லை. அவர்கள் எமது முயற்சி எண்டதுக்காக கண்ணை மூடிக்கொண்டு திரண்டு வரவேண்டுமென்டதுமில்லை. அப்பிடியிருந்தாலே தயாரிக்கப்படும் படங்கள் தரத்தைநோக்கி முன்னேறும். அப்பிடித்தான் முன்னேறியிருக்கின்றது.

கனடாவில் 1995 அளவில் வந்த முதல் திரைப்படத்தைவிட அண்மையில் வந்த படங்களில் நல்ல வளர்ச்சி தெரிகிறது. இரசிகர்களின் ஆதரவும் கூடியுள்ளது உங்களுக்குந் தெரியுந்தானே.

லோகன்: திரைப்படங்களின் தரம் உயர்ந்தால் ஆதரவும் அதிகரிக்கும் என்கிறீர்கள்..

ஸ்ரீமுரு: நிச்சயமாக...

லோகன்: சரி, தரம் உயர்ந்திருக்கிறது என மக்களுக்கு எப்பிடி அறிய வைப்பீர்கள்?.. ஏனெனில் பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி என தொடர்பு ஊடகங்களில் விளம்பரங்களும் பேட்டிகளும் வருவது மக்களுக்கு தெரியப்படுத்தவே. எனினும் இத்தகைய வழிகளாலும் எம்மவர்களை நம்பவைக்க முடியாமலுள்ளதென ஆதங்கப் படுமளவில் நிலமை இருக்கிறதே இதைவிட வேறெந்த வழிகளில் இந்நிலமையை மாற்றலாம் என எண்ணுகிறீர்கள்...

ஸ்ரீமுரு: விளம்பரங்கள் பேட்டிகளை விட வேறெந்த வழிகளில் எனக் கேக்கிறீங்கள்..

லோகன்: ஓம்..

ஸ்ரீமுரு: ஆக்களை மற்றாக்களுக்கு சொல்லப் பண்ணுறதுதான்... எங்கடை ஆக்கள் காலகாலமா இந்திய தமிழ்ப்படங்களைப் பாத்துப் பழகீற்றினம். அதே மாதிரியா எங்கட படங்களும் இருக்கவேணும் எண்டு தங்களை அறியாமலே ஒரு மாயைக்குள்ளை இருக்கினம். இலங்கையிலையும், வேற பிற நாடுகளிலையும் ஈழத்தவர்கள் எடுத்த படங்கள் அவர்களைத் திருப்திப்படுத்தேல்லையோ என்னவோ ஆனால் இப்ப அண்மையில வந்த படங்கள் கனபேரைத் திருப்திப்படுத்தியிருக்கு.. அதனால எமது மக்கள் எல்லோரும் விளம்பரங்களை நம்பாம இருக்கேல்லை எண்டு தெரியுது. ஆனா அவர்களைத் திருப்திப் படுத்துறமாதிரியான படங்கள் எடுத்தால் இவையள பூரணமா மாத்தலாம். பாக்கிற ஆக்கள் மற்றாக்களுக்குச் சொன்னா மற்றாக்களும் படிப்படியா ஆதரவு தருவினம் எண்டு நினைக்கிறன். அதுக்கு, இவை நல்ல படம் எடுப்பினம் எண்ட நம்பிக்கையை மக்களுக்கு நாங்கள் ஏற்படுத்தோணும் லோகன் அதற்காக இந்திய தமிழ்ப்படப் பாணியில் அல்லது சாயலில் நாங்களும் திரைப்படம் எடுப்பதால் எங்களுக்கென்று ஒரு தனித்துவத்தை ஏற்படுத்த முடியாது போய்விடுமல்லவா?

ஸ்ரீமுரு: எடுத்த எடுப்பிலேயே தனித்துவத்தைக் காட்டத் தொடங்கினால் அது எடுபடாது. நான் முதல் சொன்ன மாதிரி தெரிஞ்சோ தெரியாமலோ நாங்கள் இந்தியத் தமிழ்ப் படங்களில ஊறிப் போனோம். அதிலை இருந்து விடுபட நாளெடுக்கும். இதுதான் சிங்கள மலையாளப் படங்களுக்கும் நடந்தது. எடுத்தோம் கவிட்டோம் எண்டு வெளிக்கிட்டா ஈழத்து தமிழ்ப் படங்களுக்கு நடந்த கதிதான் நடக்கும். கொஞ்சம் பொறுங்கோ.. படிப்படியா எங்கட தனித்தன்மையைக் காட்டுவம். கிட்டடியில வந்த படங்களைப் பாத்தா தெரியும் அவையில எத்தனையோ விசயங்கள் இந்தியத் தமிழ்ப்

தொடர்ச்சி 12ம் பக்கம்


YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Pleated Shades
- Vertical Blinds
- Cellular Shades
- Roller Shades

FREE ESTIMATE




உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்


விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



The Mortgage
Alliance company of Canada



வீடு வாங்குவது நீங்கள்
பணம் ஒழுங்கு செய்வது நான்



*உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்*

Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி
நிறைந்த பலன்



யோகா சோதிடம்

- *கிரகப் பொருத்தம் பார்த்தல்*
- *சுபமுகூர்த்தம் கணித்தல்*
- *பலன் பார்த்தல்*
- *சாதகக் குறிப்புக் கணித்தல்*

416-299-8361

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

**விசாலமான புதிய இடத்தில்**

# Niru BRAND ®

## எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:


**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres
Scarborough, ON
Tel.: 416.750.8250 / 416.750.1976
E-Mail: info@niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# கூட்டு வர்த்தகர்களுக்கும் ஒரு காப்புறுதி

*கூட்டு வர்த்தகர்கள், கூட்டான பங்குதாரர்களுக்கான ஆயுள் காப்புறுதி என்றால் என்ன?*
*அதில் "காப்புறுதி நிவாரணம்" எப்படி கொடுத்து தீர்க்கப்படுகின்றது?*

இதனை ஆங்கிலத்தில் "Buy - Sell Agreements Insurance" என குறிப்பிடுவதுண்டு.

இதனை ஓர் உதாரணத்துடன் பார்ப்போம். (A, B, C என மூன்று பங்குதாரர்கள் சமனாக ஒவ்வொரு இலட்சம் டொலர் முதலிட்டு வர்த்தகம் ஒன்றுக்கு சொந்தம் ஆகின்றார்கள். வர்த்தகமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, இவர்களால் எவராவது ஒருவருக்கு உயிர் இழப்பு என ஒன்று ஏற்படும்போது ஏனைய இரு பங்குதாரர்களையும், வர்த்தகத்தினையும் பாதிப்பதுடன், உயிர் இழப்புக்கு உரியவரின் குடும்பத்திற்கும் ஒரு பாதிப்பினை உருவாக்குகின்றது.

இதன் காரணமாக இவ் வர்த்தகர்கள் மூவரும் வர்த்தக நிலையத்தினை கொண்டு நடத்தும் செலவுகளில் செலவோடு செலவாக ஒரு கூட்டான ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றிலும் சேர்ந்து அதற்கும் மாதா மாதாம் பணம் செலுத்துகின்றார்கள். அவர்கள் சேர்ந்து கொள்ளும் இவ் ஒப்பந்தமே இதுவாகும்.

அதாவது இவ் மூவரில் எவருக்காகவது உயிர் இழப்பு என ஒன்று நடந்தால் இழப்புக்கு உரியவரின் குடும்பத்திற்கு இவ் வர்த்தகத்தின் விற்பனை பெறுமதியில் மூன்றில் ஒரு பங்கு போய் சேர, அவரின் பங்குதாரர் உடன்படிக்கை ரத்து செய்யப்பட, ஏனைய இருவருக்கும் வர்த்தகம் சொந்தமாகின்றது.

இவ் உயிர் இழப்பினால் ஏற்பட்ட பிரச்சினைகளும் இக் காப்புறுதி ஒப்பந்தத்தினால் இலகுவாக தீர்க்கப்படுகின்றது. இங்கு இப் பங்குதாரர்களுக்கான நட்ட ஈடு என்பது மூன்று வழிகளில் கொடுத்து தீர்க்கப்படுகின்றது.

(A) FAIR MARKET VALUE - உயிர் இழப்பு நடந்த போது குறிப்பிடப்பட்ட வர்த்தக நிறுவனத்தினை விற்பனை செய்யும் போது என்ன விலை போகின்றதோ அந்த விலையில் மூன்றில் ஒரு பங்கு


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


(B) FIXED VALUE - ஒரு குறிப்பிடப்பட்ட தொகையினை மூவரும் சேர்ந்து தீர்மானித்து ஒப்பந்தத்தில் குறிப்பட்டு அதில் மூன்றில் ஒரு பகுதி இழப்பீட்டு நிவாரணமாக பெறுதல்.

(3) FORMULA VALUE - அதாவது வர்த்தகத்தின் வளர்ச்சியின் அடிப்படையில் ஒரு கோட்பாடு ரீதியில் நட்ட நிவாரணம் வழங்குதல். உதாரணமாக ஒரு கோட்பாட்டினை (FORMULA) இங்கு குறிப்பிடலாம்.

3X நடைமுறை வருட வருமானம்

2X முன்னைய வருட வருமானம்

1x2 வருடங்களுக்கு முற்பட்ட வருமானத்தினை 6ஆல் பிரித்து வரும் தொகை

இம் மூன்றினையும் சேர்த்து ஒரு இழப்பீட்டு பெறுமதியினை கணித்து கொள்வார்கள்.




இதில் எந்த முறை தேவை என்பதனை ஒப்பந்தத்தில் தெட்டத் தெளிவாக குறிப்பிட்டு கொள்வார்கள். இப்படி விதம்விதமான கோட்பாடுகள் காப்புறுதி கம்பனி முன்வைக்கும் போது விரும்பியதனை தெரிவு செய்து கொள்ளவும். இம் முறையினையே பல நூற்றுகணக்கான பங்குதாரர்கள் முதலிட்டு இருக்கும் கம்பனிகளிலும் கையாளப்படுகின்றது. ஒரு பங்குதாரரின் உயிர் இழப்பு என்பது காப்புறுதி கம்பனியினால் அவரின் குடும்பத்திற்கு பணம் கொடுத்து தீர்க்கும் போது, கம்பனியின் உரிமையிலிருந்து அவரது குடும்பத்தினரும் விடுபடுகின்றனர்.

இதே உயிர் இழப்பு நட்டஈட்டு மாதிரி, உடல் இயங்காத நிலைமை (Disability) ஓய்வு பெறும் நிலைமை (Retirement) போனறவற்றிக்கும் இக்காப்புறுதி ஒப்பந்தம் வழி காட்டுகின்றது. உதாரணமாக வயது முதிர்ந்த நிலையில் ஓய்வு பெற வேண்டிய ஒருவர் வர்த்தகத்தினை விற்று தமது பங்கினை திருப்பித் தர வேண்டும் என்ற சர்ச்சை இல்லாது இவ் வழியில் கொடுத்து தீர்க்கும் போது பிரச்சினை இலகுவாக தீர்க்கப்படுகின்றது.


அது மட்டுமல்லாது, இவ் ஒப்பந்தத்திற்கு செலுத்தும் மாத கட்டுபணம், வர்த்தக நிறுவனத்திற்கு உரிய செலவாக இருப்பதால் வருமான வரி செலுத்துவதிலும் ஒரு செலவினை கழித்து இறுதி சாதகமான அனுபவத்தினை பெற முடிகிறது.




தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
**ரவி நடராஜா**
• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket
(14 Years Insurance Claims Experience)
416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON



DEBT & MORTGAGE SOLUTIONS !!



• கடன் தொல்லையா?
• கடன்காரரர்களின் தொந்தரவா?
• Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**
அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்
**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'
for all kinds of Debt & Mortgage Solution
Lendingtree.ca

MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022
5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# சுகம் சுகமே

09ஆம் பக்கத் தொடர்ச்சி

படங்களிலியிருந்து தனித்துவமா இருக்கு தெண்டதைப் பாப்பியள்...உதாரணம் பேச்சு வழக்கு கதைக் கரு காட்சியமைப்பு..

லோகன்: அப்படி தனித்துவமா ஈழத்தமிழ்ப் படங்கள் வெளிவந்தால் பல இனத்தவர்களும் பார்க்கக்கூடியவாறு இங்கு எம் படங்கள் உயர் தரத்தில் வெளிவர வாய்ப்பிருக்கிறது எனச் சொல்லலாமா...?



ஸ்ரீமுரு: நிச்சயமாக... அது இப்ப உடனே எண்டிலலாவிட்டாலும் கொஞ்சங்கொஞ்சமா கொண்டுவருவோம்..

லோகன்: அதுக்கு கனடா நல்லதொருசூழல் இங்கு பல்லின மக்களுடன் நாங்கள் கலந்து பழகி வாழ்கிறோம். எமது படங்களை அவர்களையும் பார்க்கச் செய்வது இலகுவானது.. அதுதான் கேட்டேன்..
ஸ்ரீமுரு: நீங்கள் சொல்லுறது சரிதான்.. எத்தினை பிறமொழிப்படங்களை நாங்களும் sub title லோட பாக்கிறம்.

லோகன்: பரிசு பெற்ற படங்களைப் பாக்கிறோம்... அதில் தீவிரப் படம் கலைப்படம் எதாத்தப் படம் எனச் சொல்கிறார்களே தயாரிப்பாளர் என்ற முறையில் அதில் உங்களுக்கு நாட்டம் இருக்கிறதா?
ஸ்ரீமுரு: இல்லை...எனக்கதில் நாட்டமில்லை.... எங்களில எத்தினை வீதமான ஆக்கள் இதுகளைப் பாக்கீனம்? ஒரு ஒண்டிரண்டு வீதந்தான்...அதுவும் தங்களை வித்தியாசமான ஆக்கள் அல்லது புத்திஜீவியள் என காட்டத்தான்.. நான் தயாரிப்பாளன். போட்ட காசு திரும்ப வரவேணுமெண்டுதான் யோசிப்பன். அதுவே பிரச்சினையா இருக்கேக்கை...எல்லா ஆக்களும் அப்பிடியான படங்களைத்தான் எதிர்பாக்கிற நிலமை வந்தால் நானும் தயாரிக்கலாம்.... இப்போதைக்கு ஜனரஞ்சிதமான படங்கள்தான்..

லோகன்: அப்போ நீங்கள் அடுத்துத் தயாரித்துள்ள 'சுகம்..சுகமே!' பலரின் மனதைத் தொடும் என்கிறீர்கள்.
ஸ்ரீமுரு: நிச்சயமாக...அனைத்து மக்களினதும் மனதைத் தொட்டு கண்ணீரை வரவழைக்கும் எண்ட நம்பிக்கை எனக்கிருக்குது.

லோகன்: அது எவ்வாறான கதையமைப்பைக் கொண்டது...சொல்லலாந்தானே?
ஸ்ரீமுரு: ஓமோம் சொல்லலாம்... இதுவொரு குடும்பப்படம். பெற்றோருக்கு பிள்ளைகள் செய்யவேண்டிய கடமைகளை வலியுறுத்துறது மாதிரி...

லோகன்: இப்படத்தின் மூலம் என்ன சேதியைச் சொல்ல வருகிறீர்கள்?
ஸ்ரீமுரு: கடமை என்பது பகட்டுக்கு செய்வதல்ல ஆத்மாத்தமா செய்யுறது... நாங்கள் இதை மறந்து விடுறதை வேற ஆக்கள் சுட்டிக் காட்டுறது கேவலம் எண்டதுதான் சேதி.

லோகன்: நல்லது. இதை எங்கு படமாக்கினீர்கள்?
ஸ்ரீமுரு: மூன்று நாடுகளில் படமாக்கினோம்... இந்தியாவில் பொள்ளாச்சி, போபி செட்டிப் பாளையம், பூந்தமல்லி போன்ற இடங்களிலும் இலங்கையில் கதிர்காமம், செல்லக்கதிர்காமம், காலி, பேருவளை போன்ற இடங்களிலும், இங்கு கனடாவில் ரொறொன்ரோ, மிசிசாகா, ஸ்காபரோ போன்ற இடங்களிலும்...

லோகன்: சுகம் சுகமே..! கதைக்களத்துக்கேற்ப திரைக்கதையாக உருவானதா இல்லை திரைக்கதைக்கு அமைய கதைக்களத்தைத் தேடிச் கொண்டீர்களா?
ஸ்ரீமுரு: இலங்கை இந்தியாவில் படமாக்கியது பற்றிக் கேக்கிறீங்கள்...?

லோகன்: ஓம்...படப்பிடிப்புக்கு இலங்கை இந்தியாவென்று பறந்துபோய் வந்திருக்கிறீர்கள்... அதற்கு பிரத்தியேக காரணம் ஏதுமிருக்கிறதா?
ஸ்ரீமுரு: ஓம்...எனது தயாரிப்பில் இதுவரை வந்த உயிரே உயிரே, புது உறவு இரண்டும் இங்கு படமாக்கப்பட்ட படங்கள். ஒரு வித்தியாசமா இருக்கவேண்டும் எண்டதுக்காக கிராமிய சூழலில் எடுக்க நினைத்தேன். அதுமட்டுமில்லாமல் நாங்கள் அங்கு விட்டுவிட்டுவந்த சூழல், உறவுகள் என்பவற்றை வைத்து ஒரு படம் எடுத்தால் என்ன எண்டு யோசிச்சதால் உருவானதுதான் சுகம்.. சுகமே!.

லோகன்: திரைப்படமெடுத்து கையைச் சுட்டுக்கொண்டவர் போலில்லாமல் தொடர்ந்து மூன்றாவது படத்துக்கும் காலடி வைத்திருக்கிறீர்கள்....வெற்றியின் சூட்சுமந்தான் என்ன?
ஸ்ரீமுரு: கையைச் சுட்டுக் கொள்ளாமலில்லை.. கையைச்சுட்டுக்கொண்டாலும் மனம் சுடவில்லை.

லோகன்: உங்களுக்கு திடமான மனசு... வாழ்த்துகள்!

ஸ்ரீமுரு: லோகன், இஞ்சை மட்டுமல்ல எங்கையும் திரைப்படம் தயாரிக்கும் தயாரிப்பாளருக்கு திடமான மனசு வேணும்... பிறகுதான் பணம்... இஞ்சை எங்களுக்கு மனத்திடம் ரெட்டிப்பா வேணும்... அவ்வளவு சிரமம்

லோகன்: அந்தச் சிரமங்களை விளம்பர வாசகர்களுக்கும் சொல்லுங்கோவன்...
ஸ்ரீமுரு: நாங்கள் தொழில்ரீதியாகச் செய்யவில்லை... அதனால காசு போட்டா எல்லாம் நடக்கும் எண்டு காலை நீட்டிக் கொண்டிருக்கேலாது. தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிக நடிகையர், ஒப்பனை, உணவு, இதர பொருட்கள் எண்டு எல்லாவற்றையும் நாங்கள்தான் ஓடியாடி ஒண்டுசேர்க்கவேணும். இங்கு நடிக்க முன்வருபவர்களும் ஆர்வத்தாலையேதான் வருகினம். அதனால எல்லாற்றையும் நேர அவகாசத்தையும் கருத்தில எடுத்துத்தான் படப்பிடிப்பை வைக்க வேணும் ஓராள் வராட்டியும் எத்தனையோ காட்சிகளை எடுக்கேலாமல்போகும். படமெடுக்க இடங்கொடுக்கிறவர்களுக்கு படப்பிடிப்பை நீட்டி சிரமங்கொடுக்கக் கூடாது.... எல்லாவற்றையும் அனுசரிக்கவேணும். பொறுமையும் சகிப்புத் தன்மையும் வேணும். இப்படியே எடுத்து விட்டாலும் பார்க்க ஆக்கள் முன்வரவேணுமே.. அது குறைவு. செலவுகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேணும். எல்லாவற்றுக்கும் முதல் படங்காட்ட இடம் வேணும். அதுவும் எங்களுக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய திகதியில் படங்காட்ட ஒத்துழைப்புத் தாறதுக்கு தியேட்டர் வேணும்.

லோகன்: இவ்வளவு சிரமங்களுள் நீங்கள் இப்படத்தின் நடிகராகவும் இருக்கிறீர்கள்... ஆதலால் நடிப்பில் அதீத ஆர்வம் உள்ளவரா இருந்திருக்கிறீர்கள் போல தெரிகிறதே...எப்படி இவ்வார்வம் வந்தது?
ஸ்ரீமுரு: எனது தந்தையார் சின்னத்துரை இலங்கையில் புகழ்பெற்ற நடிகமணி வி.வி. வைரமுத்து, கலையரசு சொர்ணலிங்கம், கிருஷ்ண ஆழ்வார், அண்ணாச்சாமி போன்ற நடிகர்களுடன் நாடகங்களில் நடித்தவர். என் சின்ன வயசில் என்னையும் அவர் சிறுசிறு வேடங்களில் நடிக்கவைத்திருக்கிறார். என்னைக் கலைத்துறையில் பாடகனாகவோ நடிகனாகவோ ஆக்கிவிட வேணுமெண்ட கனவோடு இருந்தார். நான் அவர் கனவை நனவாக்குகிறேன். இதுவரை சிறுசிறு வேடங்களில்தான் நடித்தேன். சுகம் சுகமே யில் ஒரு முக்கிய பாத்திரத்தில் அதுவும் தென்னிந்திய நடிகர் நடிகைகளுடன் நடித்துள்ளேன்.

லோகன்: தென்னிந்திய தொழில்முறை நடிகர்களுடன் நடித்த அந்த அனுபவத்தைச் சொல்லுங்களேன்...
ஸ்ரீமுரு: பல திரைப்படங்களில் நடித்த குமரி முத்து, பாண்டு, தனபாலு, "மெட்டியொலி" புவனா, "மனைவி" சுந்தரி, சந்தியா இப்படி பல முன்னணி நடிகர்களுடன் நடித்ததைப் அனுபவமாக நினைக்கிறேன். முதலில் அவர்களுடன் நடிப்பதற்குத் தயக்கமாய்த் தானிருந்தது. அவர்கள் என்னை ஆர்வமூட்டி நடிக்க வைத்தார்கள். பின் எனது நடிப்பைப் பாராட்டியதும் ஊக்கப்படுத்தியதும் மறக்க முடியாதது.

லோகன்: அதில் சுவையான அனுபவங்கள் இருந்திருக்குமே...

ஸ்ரீமுரு: பல சுவையான அனுபவங்கள் சம்பவங்கள் இருக்கு.., ஒன்றைச் சொல்லுறனே... இயக்குனர் ரவி அச்சுதன் செத்தவீட்டுக் காட்சியை யதார்த்தமாக எடுக்க விரும்பியதால் பாடையெல்லாம் தயார் செய்து உண்மையான செத்தவீடுபோல இருக்கவேண்டும் என்று நூறு பேரளவில் ஆக்களையும் அங்கு ஒழுங்கு செய்திருந்தோம். இப்பிடி நூறுபேரளவில் கூடியிருக்க மனைவியை இழந்த கணவனாக நான் கதறி அழவேண்டும். மகன் வளர்ப்பு மருமகள் இவர்கள் அழுகிறார்கள் நானும் அழவேண்டும்

எப்பிடி?... இயக்குனர் ok சொல்லுறவரை அழுததுதான்... அதொரு அனுபவம்...இப்பிடி கனக்க..

லோகன்: இயக்குனர் அழும் வரைக்கும் அழுதிருக்கிறீர்கள்'
ஸ்ரீமுரு: (சிரித்துக்கொண்டு) இல்லையில்லை... இயக்குனர் பாராட்டினார்...கேட்டுப்பாருங்கள்..

லோகன்: சரி சரி.. நான் நம்புறன்.. இனி இப்படத்தைப்பற்றி வேறென்ன சொல்ல விரும்புகிறீர்கள்?
ஸ்ரீமுரு: இப்படத்தை நாங்கள் வெகு சிறப்பாக எடுத்திருக்கிறோம்... இந்த இடத்தில் இயக்குனரான எனது நண்பர் ரவி அச்சுதனைப் பாராட்டவேண்டும். நான் பாராட்டுவதைவிட தென்னிந்திய தொழில்முறைக் கலைஞர்களே பாராட்டியதுதான் சிறப்பு. தென்னிந்தியக் கலைஞர்களை சொல்லவே தேவையில்லை வெகு சிறப்பாக நடித்திருந்தார்கள். இங்கும் எமது கலைஞர்களும் வெகுசிறப்பா நடித்திருக்கிறார்கள். இங்கு வெள்ளையர்களையும் வைத்து எடுத்த பாடல்க்காட்சி சிறப்பாக இருக்கிறது. ஆங்கில நடிகை எமது கலை கலாச்சாரம் எத்தகைய உயர்ந்தது எனக் காட்டும் வகையில் மிகத் தத்துரூபமாக நடித்துள்ளார். இப்பிடிப் பல....சொன்னால் நேரமாகும்..

லோகன்: எனக்கும் நேரமாகிறது... இவ்வளவு கேள்விகளுக்கும் பொறுமையாய்ப் பதில் சொன்னதற்கு விளம்பரம் பத்திரிகை சார்பில் எனது நன்றி!

ஸ்ரீமுரு: இது சாதாரண கேள்வியா?... பரீட்சைக்குக் கேட்கிறது மாதிரி... அதுக்கு எனக்குத் தெரிந்த பதில்.. இந்த நேரத்தில் உங்களுக்கும் விளம்பரம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ராஜ மகேந்திரன் அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

லோகன்: வணக்கம். உங்கள் படைப்புகள் வெற்றிபெற விளம்பரம் சார்பில் வாழ்த்துகள்.

(விடைபெற்றுக்கொண்டு புறப்பட ஸ்ரீமுருகனும் அவர் பாரியாரும் வழியனுப்பி வைத்தனர்)

*நேர்காணல்*
*- கவினோதயம் லோகரஞ்சன்*

# பொதுக்கட்டமைப்பின் புதிய...

01ஆம் பக்கத் தொடர்ச்சி

ஓர் ஆண்டுகாலத்திற்கு மட்டுமே செயல்பட உள்ள இந்தப் பொதுக்கட்டமைப்பின் உயர் அங்கத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதி, இலங்கை அரசின் பிரதிநிதி, முஸ்லீம் மக்களின் பிரதிநிதி என்று மூன்று அங்கத்தவர்கள் இருப்பார்கள். இவர்களே வெளிநாட்டில் இருந்து வருகின்ற நிவாரணங்களை ஒதுக்கீடு செய்வது பற்றிய விதிகளை உருவாக்குவார்கள். எந்த முடிவும் மூன்று பிரதிநிதிகளாலும் ஒரு மனதாக நிறைவேற்றப்படவேண்டும். ஒருமித்த கருத்து ஏற்படாத பட்சம் பதின்நான்கு நாள் அவகாசம் அளித்து உயர் நிலைக்குழுவில் இருந்து விலக்கி கொள்ளலாம். உதவி வழங்கும் நாடுகளின் இரு பிரதிநிதிகள் கண்காணிப்பாளர்களாக, உயர்நிலைக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

ஓர் ஆண்டுக்குப்பின்னர், அதில் பங்கேற்கும் அனைத்து தரப்பினரும் ஒப்புக் கொண்டால் மட்டும் பின்னர் செயற்பாட்டுக் காலம் நீடிக்கப்படும்.

பிரதேசகுழுக்களில் பத்து பேர் இடம் பெறுவர். இதில் அரசு சார்பாக இருவர், விடுதலைப் புலிகள் சார்பில் ஐந்து பேர், முஸ்லீம்கள் சார்பில் மூன்று பேர் இருப்பர். பெண்களும் இந்தக் குழுக்களில் சமஅளவில் இடம் பெறுவர். முடிவுகளை எடுப்பதற்கு ஏழு உறுப்பினர்களின் ஒப்புதல் போதுமானது. உதவி வழங்கும் நாடுகளின் இரு பிரதிநிதிகள் இப்பிரதேசக் குழுக் கூட்டத்தில் பங்கு வகிப்பார்கள்.

மாவட்டக்குழுக்கள் அறுமாவட்டங்களில் மட்டும் தற்போது அமைக்கப்படும். பெண்கள் சமஅளவில் இக்குழுவில் இடம் பெறுவர்.

# எழுத்தாளர் நந்தி காலமானார்

யாழ். மருத்துவ பீட விரிவுரையாளரும் நந்தி என்ற புனைபெயரில் பல தமிழ் ஆக்கங்கள் தந்தவருமான கலாநிதி செ. சிவஞானசுந்தரம் அவர்கள் தனது 77 ஆவது வயதில் 4-06-05 இல் காலமானார். மலையகத்தில் சுகாதார மருத்துவ உத்தியோகத்தராக கடமையை ஆரம்பித்த நந்தி அவர்கள் பின்னாளில் யாழ்ப்பாணத்தில் தன் கடமையைத் தொடர்ந்திருந்தார். தனது எழுத்துகள் மூலம் நன்கு அறியப்பட்டது மட்டுமல்லாது யாழ். மருத்துவபீட விஸ்தீரணத்துக்கும் பெரிதும் உதவியிருந்தார்.

*•தாய்லாந்து 2000ம் ஆண்டில் திரைப்படங்களிலோ தொலைக்காட்சித் தொடரிலோ இதர ஊடகங்களிலோ புகைத்தலைக் காட்சிப்படுத்துவதை தடைசெய்யும் சட்டத்தைக் கொண்டுவந்திருந்தது. இதேபோல இந்தியாவும் இப்போது ஊடகங்களில் புகைத்தலைக் காட்சிப்படுத்த தடைவிதித்துள்ளது. இதற்குமுன் எடுக்கப்பட்ட காட்சிகளில் "புகைத்தல் உடல்நலக் கேடுதரும்" என்பதாக எச்சரிக்கையையும் சம்பந்தப்பட்ட தயாரிப்பாளரோ வினியோகத்தரோ இணைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:


**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

# MALVERN MONTESSORI SCHOOL



**10 Sewells Road, Scarborough**
**(Sewells / Neilson)**

***Preparing your children for new experiences, challenges, and making them feel connected to a caring community***

**APPLICATIONS ACCEPTED NOW!**

## MONTESSORI PRE-SCHOOL

- AGES 2 TO 6 YEARS
- MORNING AND EVENING CLASSES
- LOW STUDENT ˆTEACHER RATIO
- READING, WRITING AND MATH EMPHASIZED
- HISTORY, GEOGRAPHY AND SCIENCE
- FRENCH INTRODUCTION
- MUSIC AND ART CLASSES
- BRIGHT SPACIOUS CLASSROOMS
- EXTENDED CARE HOURS ( 7.30am - 6.15pm)
- EXCITING SUMMER SCHOOL (JULY and AUGUST)

FOR ENROLLMENT PLEASE CALL (416) 724-8900

*"THE MONTESSORI METHOD OF EDUCATION DEVELOPS THE WHOLE PERSONALITY OF THE CHILD, NOT MERELY HIS INTELLECTUAL FACULTIES BUT ALSO HIS POWERS OF DELIBERATION, INITIATIVE, AND INDEPENDENT CHOICE WITH THEIR EMOTIONAL COMPLEMENTS."*

# SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







**Fork Lift licence $75.00**

**Truck licence $899.00**

## In Classes

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- **A-Z & D-Z up grade • One on One Training**
- **Job Placement Right Away!**
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake $175.00**

**Excellent Quality - Low Cost Training**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618/416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# NTE AUTO

## New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# பூரண சரணாகதியின் மகத்துவம்

வாழ்வில் எனது செயற்பாடுகள் ஆரோக்கிய மானவையா அல்லது ஆரோக்கியமற்றவையா என்பதை எப்படி நான் அறிந்து கொள்ளலாம்? நான் செய்யும் கருமங்களிற்கு, எவ்வளவு சக்தியையும் நேரத்தையும் செலவழிக்கிறேன் என்பது தான் எனது செய்கைகளின் ஆரோக்கியத்தினை நிர்ணயிக்கின்றது.

வாழ்வில் ஒரு குறிக்கோளிற்கும், வக்கிர obses-sion எனும் வக்கிரச் செயல்பாட்டிற்கு நிறைய வித்தியாசம் இருக்கின்றது. பொறுப்புடன் செயற்படுவதற்கும் தீவிர வக்கிர (obsession) மனப்பான்மைக்கும் கூட பெரிய வித்தியாச முண்டு. தற்போதைய கடுகதி வாழ்க்கை பலரின் மனதை வக்கிரப்படுத்தி அவர்களைத் திரும்பத் திரும்ப அத்தியாவசியமற்ற செயல்களைச் செய்யும் இயந்திரப் பழக்கத்திற்கு அடிமைப்படுத்துகின்றது. யாழ் நகர் சாந்தியகம் உளவளத்துணை நிலையத்திற்கு வந்த அந்த அழகிய இளம் பெண்ணுக்கு ஒரு விசித்திர பழக்கம். சவர்க்காரத் தட்டுப்பாட்டினால் யாழ். மக்கள் அவலப்பட்டுக் கொண்டிருந்த அந்தக் கால கட்டத்தில் இந்தப் பெண் தனது கைகளை, தோலுரியுமட்டும் இடைவிடாது சவர்க்காரம் போட்டுக் கழுவும் பழக்கத்திற்கு அடிமைப் பட்டிருந்தார். வீட்டிலும் வெளியிலும் சகலவற்றையும் அவருக்குத் திரும்பத் திரும்பக் கழுவவேண்டும், துடைக்க வேண்டும் என்ற கட்டாய மனப்பான்மை. அருட் தந்தை கரவையூர் செல்வரத்தினம், தந்தை டேமியன் மனோவைத்தியர் தயா சோமசுந்தரத்தின் மேற்பார்வையின்கீழ் கத்தோலிக்க கன்யா ஸ்திரி ஒருவரின் உளவளத்துணையினால் இப்பெண் இப்பழக்கத்தை கைவிட்டுக் குணமடைந்தார். தம் பிள்ளைகளுக்கு தேவைக்கு அதிகமாக வற்புறுத்தி உணவு ஊட்டுவது, வீட்டையும், வீட்டுத் தளபாடங்களையும் திரும்பத்திரும்பத் துடைத்து கூட்டிப் பெருக்க வேண்டிய கட்டாயத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் பலர் எம்மிடையே வாழ்கின்றனர் என்பது எனக்கு தெரியும். பலருக்கு செய்ய வேண்டிய வேலைகள் தலைக்கு மேல் குவிந்துதிருப்பது



உண்மைதான். வாழ்வில் வெற்றியடைய அவர்களை ஊக்குவிக்கும் உந்துசக்திகளே, சிலசமயங்களில் துரதிர்ஷ்டவசமாக அவர்களின் மன உளைச்சல்களிற்கும் விரக்திக்கும் காரணமாகி விடுகின்றன.

நீ விரும்புவற்றைப் பெற்றிட, கடினமாக உழைக்கத்தான் வேண்டுமென்பது யாவரும் அறிந்த உலக நியதிதான். ஆனால் அதற்காக இடைவிடாது இவ்வளவு கடினமாக நீ உழைக்க வேண்டுமா என்பது தான் கேள்வி. ஓய்வேயில்லாமல் இவ்வாறு நீ உழைக்கத்தான் வேண்டுமா? எந்த நேரமும் இப்படி ஏதும் நீ செய்து கொண்டிருக்கத்தான் வேண்டுமா? கொஞ்சநேரம் இளைப்பாற உன்னால் முடியவே முடியாதா? ஓய்வெடுக்காத தமது இந்தப் பழக்கத்தை மாற்றவே முடியாது என பலர் நினைப்பார்கள், கூறுவார்கள். ஆனால் எமது ஆசை அபிலாசைகளை நிறைவேற்றிட நாம் எடுக்கும் ஒவ்வொரு அடிக்கும், எமக்கு உதவிட பிரபஞ்சத்தின் சக்தி இரண்டு அடி எடுத்து வைக்கும் எனும் உண்மையை எம்மில் பலர் உணர்வதில்லை. “என்னை நோக்கி ஓர் அடி எடுத்தால் நான் உன்னை நோக்கி நூறு அடி எடுப்பேன்” என்பது சத்யசாயி பாபாவின் வாக்கு. யாவற்றையும் நாமே தட்டந்தனியாகக் செய்து முடித்து விட்டால், எமக்கு இறைவன் உதவி ஒத்தாசை கிடைக்க இடமே இல்லாது போய்விடும் அல்லவா?

இவ்வளவு கடினமாக நாம் உழைப்பதற்கு காரணம் என்ன தெரியுமா? அச்சம் தான் அது. வெகுசிலரே இதை ஒப்புக்கொண்டாலும், பெரும்பாலானோர் எமது குறிக்கோளை யொட்டித் திருப்திடையாது தோல்வியடைந்து விடுவோம் எனும் பயத்துடனேயே வாழ்கின்றோம். இறையருள் எமக்கு அத்தியாவசியமில்லை. நாம், மட்டுந்தான் சகலதையும் ஒப்பேற்ற வேண்டும் எனும் எண்ணத்துடன் இறைவனுடன் போட்டி போடுகிறமாதிரி சிலவேளைகளில் படாதபாடு படுகின்றோம். இத்தகைய எண்ணத்துடன் வாழ்ந்தால், ஈஸ்வரன் என்ன செய்வார், எனக்கு எப்படி உதவுவார் என நீ நினைக்கிறாய்?

தீவிர மனஸ்தாபம், கோபம், பலவந்தக் கட்டாயம், விசாரம் வியாகூலம், போராட்டம், ஏமாற்றம் யாவும் அத்துமீறிய உனது பிரயாசையின் விளைவாக வரும் பலாபலன்கள் தான். அண்ட சராசரங்களைச் சிருஷ்டித்து, அனைத்து உயிர்களையும் பொம்மலாட்டம் ஆட்டிடும் அப்பேரருட் சக்தியாம் இறைவன், உனது தார்மீக ஆசைகளை சுலபமாக நிறைவேற்றுவார். உன் வாழ்வில் இறைசக்தி செயற்பட நீ இடமளித்து, அவரைப் பிரார்த் தித்தலால் உனக்குக் கிடைக்கும் உதவி ஒத்தா சைகளை கண்டு நீ நிச்சயம் ஆச்சரியப்படுவாய்.

ஆம்! வீட்டில் தியானம், யோகம், பஜனை செய்தால் போதும் என்ற எனது மனோபாவம் பிழை என்பதை நான் இப்போ உணர்கின்றேன். நீ தேவைக்கு அதிகமாகச் செயற்படுகிறாய் என்பதை இன்றுவரை நீ உணராது இருக்கலாம். உனது தீவிர முயற்சிகளே உனது

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் (53)

முன்னேற்றத்தைத் தடை செய்திருக்கலாம். கொஞ்சம் நிதானித்துக் கொள். உட்கார்ந்து ஓய்வெடு. உனக்கு உதவ இறைவனுக்குச் சந்தர்ப்பம் கொடு. உனது பிரார்த்தனை வீண்போகாது. இறைவன் எனக்குச் செய்யக்கூடிய உதவி ஒத்தாசைகளைச் செய்ய இன்று அந்த ஒரேயொரு பேரருட் சக்திக்கு இடமளித்துத் தலைவணங்குகின்றேன்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617



**லலிதா புரூடி**


சுனாமியால் அழியுண்ட ஊரின் மரபு மாற்றங்கள் பற்றி அறிந்துகொள்ள விரும்புவோர்க்கு ஓர் அரிய பொக்கிஷம்: “ஆழியவளை”

சிறந்த இந்நூலை வாசித்துப் பயனடைவீர்.

கிடைக்கும் இடங்கள்: முருகன் புத்தகசாலை, மிட்லான்ட் அன் எல்ஸ்மெயர். ரொறன்ரோ.
பூபாலசிங்கம் புத்தகசாலை: 202- செட்டியார் தெரு, கொழும்பு-11.
பூபாலசிங்கம் புத்தகசாலை: பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.





# தலித் படும் பாடு - 1

## வெங்கட் சாமிநாதன்

இவ்விடயத்தில் தீவிர அக்கரை காட்டியது, விடுதலைச் சிறுத்தை திருமாவளவன் தான்.

முரசொலி கொட்டிக் கொட்டித் தமிழ் அரசியல் தலைகள் தம் பெருமைகளைப் பற்றி ஆரவாரம் எழுப்புவது ஒரு புகை மூட்டமாகவே இருப்பது பற்றி எத்தனை பேர் கவலை கொள்கின்றனர்? இதன் பொய்மைகளும் ஏமாற்றுக்களும் எல்லோருக்கும் தெரிந்தும் அது பற்றி மௌனம் சாதிக்கும் கயமை கடந்த பல தலைமுறைகளாக தொடர்ந்து அதுவே மரபாகி, அரசியல் நடைமுறையும் ஆகி வருகிறது. காரணம் அப்பொய்மையில் தான் அரசியல் தலைமகளின் சுயலாபமும், அவர்கள் அரசியல் வாழ்வும் அடங்கியுள்ளது போலும். இது தொடர்ந்த பொய்மையின் மோசடியின் சரித்திரம். இதன் ஆரம்பங்களை இப்போது சொல்வதற்கில்லை. அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது இப் பொய்மையின் ஒரு கிளைக் கதையின் இப்போதைய நடப்புகளை மாத்திரம் சொல்லி பின் அதன் சரித்திர ஆரம்பங்களுக்கும் அதன் சரித்திர நாயகர்களுக்கும் செல்லலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய சமுதாயத்தின் சாதி அடுக்குகளைப் பற்றியும் அதன் சமூக அநீதிகளைப் பற்றியும் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், இவ்வடுக்குகளின் அடிமட்டத்தில் ஆயிரக்கணக் கான வருடங்களாக நசுங்கிக் கிடக்கும், தன் மேல் இருக்கும் ஒவ்வொரு அடுக்கின் சாதிக் கொடுமையையும் தாங்கிக் கிடக்கும் கொடுமைக்கு எதிராக, தீண்டாதாருக்கு ஆதரவாக, முதலில் குரல் கொடுத்தது காந்தி, அவரை எதிரொலித்தது காங்கிரஸ். விடுதலைப் போராட்டத்தில், தீண்டாமை ஒழிப்பும் ஓர் அங்கமாயிற்று. ஏனெனில் தலித்தின் விடுதலை இன்றி இந்திய சமூகம் விடுதலை பெற்றதாகக் கொள்ள முடியாது என்பது அவரது தீர்மானமான கருத்தாக இருந்தது. இதை அவரது ஒவ்வொரு செயலும் சாட்சியப்படுத்தும். காங்கிரஸ் கட்சியும் அதை ஏற்றது.

சுதந்திர இந்தியாவில் தலித்துகளுக்கு கல்வி ஸ்தாபனங்களிலும், அரசு நிறுவனங்களிலும் ஒதுக்கீடு தரப்பட்டது. இந்தியா முழுதிலும் தலித்துகளும் பூர்விக குடிகளும் மொத்த மக்கள் தொகையில் சுமார் 25 சதவீதம் இருப்பார்கள். ஆனால் இந்த சதவீதக் கணக்கின்படி, தேர்தலில் வெற்றி பெற்று, சட்ட மன்றங்களில், நாடாளுமன்றத்தில் உறுப்பினராகி அரசியல் அதிகாரத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்புள்ள தலித்துகள் 25 சதவீதத்தில் இருப்பது சாத்தியமில்லை. 25 சதவீத வாக்குகளே அதிக பட்சம் பெறும் சாத்தியமுள்ள தலித்துகள் என்றும் எத்தேர்தலிலும் வெற்றி பெறுவது என்பது சாத்தியமில்லை. அதனால், ஒரு சில தொகுதிகளில், தலித்துகள் தான் போட்டியிட முடியும், எந்த கட்சியினராக இருந்தாலும், அத்தொகுதியின் பெரும்பான்மையினர் எந்த வகுப்பினராக இருந்தாலும் அவர்களின் பிரதிநிதி ஒரு தலித்தாகத் தான் இருக்கவேண்டும் என்று சட்டமியற்றப்பட்டது. சட்டமன்றத்துக்கும் நாடாளு மன்றத்துக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த ஒதுக்கீடு, பின்னர் சமீபத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட பஞ்சாயத்துகளுக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதி முறையாகியது. இதன்படி தமிழ் நாட்டின் ஊராட்சி மன்றங்கள் சிலவற்றின் தலைமைகள் தலித்து மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது. இவ்வாறு, அதிக பட்சம் 25 வீதமே உள்ள தலித் மக்கள், தங்கள் பிரதிதியாக ஒரு தலித்தை என்றும் தேர்ந்தெடுக்க முடியாத நிலையிலிருந்து விடுபட்டு, ஒரு சில தொகுதிகளிலாவது அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது. ஓர் இலட்சிய சமூகத்தில் இத்தகைய ஒதுக்கீடு என்பது விரும்பத்தக்கது அல்ல என்ற போதிலும், ஒரு தற்காலிக ஏற்பாடாக இதை ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகுதிகள் ஒரு கால கட்டத்திற்குப் பின் வேறு தொகுதிகளுக்கு மாறும். ஒரு தொகுதி என்றென்றும் ஒதுக்கப்பட்ட தொகுதியாக இராது.

இவ்விதியின்படி எத்தனை பஞ்சாயத்துக்கள் தலித் தொகுதிகள் என ஒதுக்கப்பட்டுள்ளன எனத் தெரியாது. ஆனால் நான்கு தொகுதிகள், தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களான, மதுரை, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த, தேவர், கள்ளர் சாதி மக்கள் பெரும்பான்மையினராக வசிக்கும், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டா மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் என்று நான்கு ஊராட்சி மன்றங்கள் தலித்துக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகுதிகள் என்பது சில வருடங்களாக பத்திரிகைச் செய்திகள் மூலம் தமிழ் நாடு முழுதும் பிரசித்தமாகியுள்ளது. பிரசித்ததுக்குக் காரணம், தமிழ் நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1994-ம் வருடம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதே, அன்றிலிருந்து இன்றுவரை நடந்துள்ள எந்தத் தேர்தலின் மூலமும், ஒரு தலித் இந்த நான்கு ஊராட்சிமன்றங்களின் தலைமைக்கு வந்ததில்லை. இந்த ஊர்களில் பெரும்பான்மையினராக உள்ள தேவர்கள், கள்ளர்களே இதற்குக் காரணம். அவர்கள் மிகவும் பிற்பட்ட சாதியினராக சட்டப்படி ஏற்கப்பட்டுள்ளவர்கள். அவர்கள் தம்மை பின்



தங்கியவராக கருதி அங்கீகரித்துக் கொண்டுள்ளார்கள் என்பது அல்ல இதன் பொருள். இத்தகை அங்கீகாரத்தினால் அவர்களுக்கு கல்வி, அரசியல் சலுகைகள் பெற பெரும் வாய்ப்பு இதில் உண்டு. இதில் அவர்களுக்கு மகிழ்ச்சியே. அவர்கள் சாதியில் தலித்துகளுக்குச் சற்று ஒருபடி மேல் நிலையில் உள்ளவர்கள். இவர்களுக்கும் மேல் படியில் எண்ணற்ற சாதிகள் உண்டு. அவர்கள் எல்லோராலும் இவர்கள் நேற்று வரையில் ஒதுக்கப்பட்டு வந்தவர்கள் தான். இவர்கள் இப்போது, அரசியல் அதிகாரத்தில் பங்கு கொண்டவர்களாகவும், பொருளாதார நிலையில் தம்மை மேம்படுத்திக் கொண்டவர்களாகவும் இருப்பதால், ஒன்று, சாதிப்படியில் தமக்கு மேல்படியில் உள்ளவர்களுக்கு சமமாக தம்மை அதிகாரபலம் பெற்றவர்களாக உயர்த்திக் கொள்வதில் அல்லது, அவர்களை, தம் அதிகார வட்டத்தில் தமக்குக் கீழ் உள்ளவர்களாகக் காண்பதில் இவர்களுக்கு மகிழ்ச்சிதான். அத்தகைய சமூக மாற்றத்தை இவர்கள் வரவேற்கவே செய்கிறார்கள். இந்த மன மாற்றம், சமூக நிலை மாற்றம், அரசியல் அதிகாரத்தில் பங்கு, பொருளாதார பலம் என்று பல வகைகளிலும் மேல் நிலை மாற்றங்கள் எல்லா இடைப்பட்ட சாதிமக்களிடையேயும் நிகழ்ந் துள்ளது. அது அவரவர்க்கு உற்சாகத்தையே கொடுத்துள்ளது. ஆனால், சாதி ஏணியின் படிகளில் ஏறி மேல் நிலை அதிகாரம் பெறுவது தமக்கே உரியது என்ற நினைப்பு இவர்களுக்கு உண்டு. அதே உரிமையில் தமக்குக் கீழ் படியில் உள்ள சாதியினரும் பங்கு கொள்வது என்பது என்னவோ இவர்களுக்கு என்றுமே உவப்பாக இருந்ததில்லை. இதில் தாம் ஏறுவதற்கு படிகள் காணும் எந்த சாதியினரிடமும் காணப்படும் விதி விலக்கற்ற மனோபாவம். சாதிப்படிகளும் சமூக நீதியும் இந்த மனோபாவம் தான் கள்ளர், தேவர் சாதியினரிடமும் காணப்படுவது. இந்த மனோபாவத்தின் விளைவாகத்தான், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற நான்கு கிராமங்கள் பிரசித்தி பெற்றுள்ளன. இனி விவரங்களுக்குப் போகவேண்டும்.



பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த 1994ம் ஆண்டிலிருந்து 17 வருடங்களாக எந்த ஒரு தலித்தும் பஞ்சாயத்துத் தேர்தலுக்குத் தன்னை வேட்பாளராக மனுச்செய்ய விடாது பயமுறுத்தி அடக்கி வைத்து வந்துள்ளனர். 17 ஆண்டுகளாக தேர்தல் நடக்க

தொடர்ச்சி 17ம் பக்கம்


visit us online at www.divinehome.com



25%-45% OFF

கைகளால் செதுக்கப்பட்ட பூஜைமேடைகள்
அன்பளிப்புப் பொருட்கள்,
சுவாமிப்படத்தட்டுகள், படங்கள்
சுவாமி சிலைகள்,
பூஜையறை அலங்காரப் பொருட்கள்

ஒவ்வோரு வீட்டிற்கும் ஏற்ற சுவாமிப்படத்தட்டுகள்

Scarboroughவில் Eglinton & Bellamy சந்திப்பில்

DIVINE HOMES
Peace & Prosperity

தெய்வ இல்லம் அமைதிக்கும், சேமுமைக்கும்

100ற்றும் அதிகமான தெரிவுகள்

2-2956 Eglinton Avenue East, Scarborough
Call: 416-289-1043, 416-999-3997

புதிய கிளை Brampton மாநகரில்
HWY 10/Sandalwood
114 Masters Cr., Brampton
Tel: 905-495-4208

Special Design & Custom Orders Available... Call for more info...








Buy Direct From Manufacturer: Prices Slashed



எல்லோர் கண்களும் தொலைக்காட்சியைப் பார்த்தபடி... சிலரின் காதுகள் வானொலிகள் கேட்டபடி... பிரபல... மைக்கல் ஜாக்சனின் தீர்ப்பை எதிர்பார்த்தபடி...



சட்டம் லேசிலை... விடாது... 10, 15 வருசமெண்டாலும் தீரும்... என தனது சுற்றுப்புற சூழலை வைத்து கூறினா ஆட்டிலறி... அன்னம்மா...

உலகர் கடைக்கண்ணால் பார்த்து மனதுக்குள்... சிரித்துக் கொண்டார்... கடவுளின் தீர்ப்பை மனிதன் நாளுக்கு நாள் அனுபவித்துக் கொள்கிறான்...



ஆனால்... சட்டத்தினால்... தினம் தினம் நடக்கும் தகிடுதத்தங்கள்... வேலை செய்து கொண்டு சமூகசேவைப் பணம் எடுத்தவருக்கு பயங்கர தண்டனையும் கிடைத்திருக்கிறது...

ஆனால் அரசியலிலும் பொதுவாழ்விலும் பல லட்சம் டொலர் அதுக்கு... இதுக்கு... என கையாடியவர்களுக்கு... விசாரணைக் கமிஷன்... கண்டறியாத சட்டம்... சட்டம் ஒரு....

உலகண்னை... முருகேசற்றை... தம்பியாற்றை பெடியனைக் கூட்டிக் கொண்டு வந்தது... உங்கடை பிராங்பேட் பேரம்பலத்தின்ரை பெறாமேனாம்... என ஒளிவு மறைவின்றி... ஜோர்ஜ் புஸ்... சதாம்குசேனைக் குற்றம் கூறுவது போல் கூசாமல் பேசினா... செக்கண்ட் புளோர் செல்லம்மா... திடீரென... கதவு திறக்கத் துள்ளிக் கொண்டு வந்தான் பிறிம்லி மீனாவின் மகன் மதன்.

உலகப்பு... உலகப்பு... மைக்கேல் ஜாக்சன் not guilty... குற்றவாளி இல்லையாம்... Can you believe this...? என்றபடி வந்தான்.




நம்பமுடியவில்லை... இல்லை... இல்லை... அவளா சொன்னாள்... இருக்காது..... வானொலியில் பாடல் போய்க்கொண்டிருந்தது... பிறிம்லி மீனா, Mr. தாடி சிரித்தபடி வந்தனர்..... வாடா... வாடா... என்றபடி உலகர் வரவேற்க..... அப்ப உலகண்னை... ஏயர் போர்ட்டிலை ஏஜெண்ட் எண்டு பிராங்பேட் பேரம்பலத்தின்ரை பெறா மகனை பொலிஸ் பிடிச்சு இப்ப 6, 7 வருசம்... இப்பவும் வழக்கு நடக்குதாம்... எண்டா செக்கண்ட் புளோர் செல்லம்மா... ஆட்டிலறி அன்னம்மாவுக்கு கண்ணீர்ப்புகை பட்ட புத்தபிக்கு போல ஆத்திரம், அடக்கமுடியவில்லை... கண்டறியாத சட்டம்... செல்லம்மா... ஈரான் கலவரத்தில எத்தினை அமெரிக்கரை ஈரான்காரர் வெட்டி, சித்திரவதை செய்து கொலை செய்திருப்பினம்... ஆனால்... 52 அமெரிக்கரை கனடாதான் கனடா பாஸ்போர்ட் செய்து பக்கத்து... நாடுகளுக்குள்ளாளை கூட்டிக் கொண்டு வந்தவை...அவை கூட்டிக்கொண்டு வந்தா... சாதனை.. நாங்கள் கூட்டிக் கொண்டு வந்தால்... வேதனை...



அவை செய்தால்... பாராட்டு...

எங்கடை ஆட்கள் செய்தால்... அவைக்கு ஏஜெண்ட எண்ட பட்டம்... என படபடவெண்டு வெடித்தா... ஆட்டிலறி அன்னம்மா... ஏன் வீணா ஆற்றையோ பிரச்சினைக்கு நீங்கள் வீணா.. சண்டைப்பிடிக்கிறியள்... என பிறிம்லி மீனா... சொல்ல..... உலகர்... ராசம்மா... ஆட்டிலறி என்னம்மா. செக்கண்ட் புளோர் செல்லம்மா எல்லோரும் ஒரே வேகத்தில் பிறிம்லி மீனாவைப் பார்த்தனர்...

அடேயப்பா... பிறிம்லி மீனா மற்றவர்களை ஏன் சண்டை பிடிக்கிறீங்கள் எனக்கேட்டபோது.. சரித்திரங்கள் சக்கரம் போல உலகர் கண்முன் வந்து போனது...




கலிங்கத்துப் போரில் பலர் உயிர் மடிந்தபின் துறவறம் பூண்ட அசோக சக்கரவர்த்தி...




உலகத்தையே சர்வாதிகார ஆட்சிக்கு கொண்டு வர நினைத்த (ஹிட்லர் வாழ்ந்த) ஜேர்மனி, இன்று உலகில் போரால் பாதிக்கப்பட்டு வரும் அரசியல் அகதிகளுக்கு தஞ்சம் கொடுத்து வாழ வழி வகுத்துக் கொடுக்கிறது. ஆயுதப் புரட்சி மூலம்... ஸ்ரீலங்கா அரசையே கவிழ்க்க நினைத்த செகுவேரா இயக்கம் இன்று ஜே.வி.பியாக, அரசியல் கட்சியாக... அதே ஸ்ரீலங்கா அரசுடன்... இணைந்திருப்பது... அடேயப்பா...

நித்தம் நித்தம் மாறுகின்றதெத்தனையோ...
மாறியது நெஞ்சம்... மாற்றியது யாரோ...



தீராத கோபங்கள் போரில் முடிவதும்... சிறு சிறு சண்டைகள்... பாசத்துடன் வாழ்ந்த... பெரிய குடும்பங்களை சிதைப்பதும்... என்றுதான் மாறுமோ...

நெஞ்சங்கள் மாறவேண்டும்... மனதில் மாற்றங்கள் வேண்டும்...



மனதில் உறுதி வேண்டும்...
வார்த்தையிலே தெளிவும் வேண்டும்...
- பாரதியார்

128

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

